பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 28 வியாழக்கிழமை (12-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:261

# அரசுடன் இணைவது குறித்து இ.தொ.காங்கிரஸிற்குள் குழப்பம்

## தலைவர்களின் ஸ்திரமற்ற போக்கால் திரிசங்கு நிலையில் தொண்டர்கள்

**அரசுடன் இணைவது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ஆட்டம்காணும் அரசுக்கு முட்டுக்கொடுக்கத் தயாரான இந்தக் கட்சி கடைசி நேரத்தில் அதிலிருந்து பின்வாங்கவும் தயாராகி விட்டதாகவும் கூறப்படுகிறது. தலைமையின் இந்தத் தடுமாற்றப் போக்கால் அடுத்த நிலையில் உள்ள பிரமுகர்களும், தொண்டர்களும் திரிசங்கு நிலையில் அல்லாடுகின்றார்கள் என இ.தொ.காவின் கீழ்மட்டத்தினர் சினக்கின்றனர்.**

ஆளுங்கட்சியுடன் சேர்ந்து மாகாணசபைகளில் ஆரவாரமாகப் பதவியேற்றவர்களின் நிலைதான் பரிதாபத்துக்குரியதாகியிருக்கின்றது. ஆளும் கட்சியில் தொடர்ந்து நீடிப்பதா அல்லது எதிரணிக்குத் திரும்புவதா என்று தெரியாமல் அவர்கள் குழம்பிப்போயுள்ளனர்.

ஆளும் தரப்புடன் சேர்வதில்லை என்ற முடிவைக்கூடத் திட்டவட்டமாக எடுக்காமல் - இ.தொ.கா. தலைமை மதில் மேல் பூனையாக இருந்துகொண்டு ஆளும் தரப்புக்கும், எதிர்த்தரப்புக்கும் போக்குக் காட்டிக்கொண்டு இருப்பதால் அது பலதரப்பினதும் எரிச்சலுக்கும் உள்ளாகியிருக்கிறது.

இதுவரை காலமும் ஐ.தே.முன்னணியுடன் இணைந்து இயங்கிவந்த இ.தொ.கா., ஆளும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவடி வேம்பில் இரு புலிகள் கைது

மட்டக்களப்பு மாவடிவேம்புப் பகுதியில் வைத்து நேற்று விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனக் கருதப்படும் இருவர் இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம ரி-56ரக துப்பாக்கி ஒன்றும், கிரனேட் ஒன்றும் இருந்தன என்று இராணுவப் பேச்சாளர் சுமேபெரேரா தெரிவித்துள்ளார். கந்தசாமி கரன் (வயது-24), கணபதிப்பிள்ளை சுரேந்திரன் (வயது-26) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். (க)

## சமாதானச் செயலகத்துக்கு வாகனம்: ஜே.வி.பி. தரப்பில் அதிருப்தி தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்துக்கென நான்கு வாகனங்களைத் தீர்வையற்ற முறையில் இறக்குமதி செய்வதற்கு அரசு அனுமதி அளித்திருப்பது குறித்து அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அதிருப்தி தெரிவித்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் பதுளையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் வைத்து ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ஸ எம்.பி. இந்த அதிருப்தியை வெளியிட்டார்.

விமல் வீரவன்ஸ எம்.பி. தமது உரையில் தெரிவித்ததாவது:-

கடந்த அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஒலிபரப்புச் சாதனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியமையையும் தற்போது வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டமையையும் சமமாகக் கருதமுடியாது.

எனினும், ஐ.தே.கட்சி இதனைச் சமப்படுத்த முனைகிறது.

சம்பூர் போன்ற தேசியப் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிலை கொள்வதற்கு இடமளிக்காதிருக்க ஜனாதிபதி எடுத்த தீர்மானம் குறித்துத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் - அவர் தெரிவித்தார். (எ-8)

## அமெ. தூதரகத்தைத் திறப்பது தொடர்பாக முடிவு இல்லை

மர்மப் பவுடர் தபாலில் அனுப்பப்பட்டதை அடுத்துத் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தை மீண்டும் திறப்பது குறித்துத் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் அடெம் ஈரெய்லி தெரிவித்துள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தூதரகத்தைத் தற்காலிகமாக மூடியுள்ளதாக வாஷிங்ரனில் வைத்துச் சர்வதேச ஊடகங்களுக்கு ஈரெய்லி தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதரகத்தை அடுத்துள்ள கட்டடத்தில் இயங்கும் அமெரிக்க உதவி நிறுவனம், நூலகம், கலாசார நிலையம் என்பனவும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, சந்தேகத்துக்குரிய தூள்களை குறித்துப் பரிசோதனை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தின் பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளரை அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆயினும், இந்தத் தூள்கள் குறித்துப் பரிசோதனை நடத்துவதற்குரிய வசதிகள் தங்களிடம் இல்லையென பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளர் டபிள்யூ.டி.எம்.குணரட்ன தெரிவித்தார். (க)

### ஜே. வி. பியின் வரிசையில்

# இடைக்கால நிர்வாகத்துக்கெதிராக போர்க்கொடி தூக்குகிறது ஈ.பி.டி.பி.

கொழும்பு,ஓக.12

ஜே.வி.பியினருடன் இணைந்து ஈ.பி.டி.பியும் இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளது.

இடைக்கால நிர்வாக அதிகாரங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டால் அது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களினதும், மாற்று அரசியல் கட்சிகளினதும் அடிப்படை மனித உரிமைகளுக்கு ஆப்பு வைப்பதாகவே அமையும் என ஈ.பி.டி.பி. அபாயக் குரல் எழுப்பியுள்ளது.

சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் எமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதையே மையமாகக் கொண்டுதான் பேசவேண்டும் என்பதை நாம் எதிர்க்கின்றோம்.

இறுதித் தீர்வுக்கான பேச்சுக்கள் நடைபெறும் போது அதில் ஓர் அம்சமாகவே இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடயம் உள்ளடக்கப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக அதிகாரம் ஒப்படைக்கப்பட்டால் அங்கு மீண்டும் சர்வாதிகாரம் தலைதூக்கிவிடும். மக்கள் சுதந்திரமாகச் செயற்படமுயாது. புலிகளுக்கு மாறான கருத்துடைய அரசியல் அமைப்புகள் இயங்கமுடியா. இதனால், வடக்கு - கிழக்கில் மீண்டும் ஓர் இரத்தக்களரி ஏற்படும். அடிப்படை மனித உரிமைகள் அடியோடு குழிதோண்டிப் புதைக்கப்படும்.

எனவே, புலிகளிடம் இடைக்கால நிர்வாக அதிகாரம் வழங்கப்படுவதைக் கடைசிவரை எதிர்ப்போம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் செவ்வாய் இரவு ஈ.பி.டி.பி. பிரமுகர் சுட்டுக் கொலை!

திருகோணமலை,ஓக.12

திருகோணமலை திருஞானசம்பந்தர் வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆத்மலிங்கம் ரமணி (பாண்டியன், வயது-49) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்டவராவார்.

சம்பவத்தை அடுத்து சடலம் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பிரேத பரிசோதனைகளை அடுத்து சடலத்தை ஈ.பி.டி.பியினர் பொறுப்பேற்று, குடும்பத்தினரிடம் ஒப்படைப்பர் எனக் கூறப்பட்டது.

ஈ.பி.டி.பியில் நீண்டகாலமாகப் பணிபுரிந்த இவர், ஈ.பி.டி.பியின் மாவட்ட இணை அமைப்பாளராவார். கடந்த பொதுத் தேர்தலின் போது அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களுள் ஒருவராவார். (க)

## புலிகள் – அதிரடிப்படையினர் அம்பாறையில் நேற்றுச் சந்திப்பு

அக்கரைப்பற்று,ஓக.12

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், விசேட அதிரடிப்படைப் பொலீஸாருக்குமிடையே நேற்றுக்காலை 10 மணியளவில் அக்கரைப்பற்றிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் விசேட அதிரடிப்படையின் சார்பில் கட்டளையிடும் தளபதி வசந்த ரட்நாயக்கா, பொலீஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன உட்பட மற்றும் பல அதிகாரிகளும், விடுதலைப் புலிகளின் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.குயிலின்பன் தலைமையில் ஐவர் கொண்ட குழுவினரும், கரையோரப் பிரதேசப் பொலீஸ் நிலையங்களில் பணியாற்றும் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நுவரெலியாவில் பொதியால் பரபரப்பு

நுவரெலியா,ஓக.12

நுவரெலியா நீதிமன்றுக்கு அருகில் நேற்றுச் சந்தேகத்திற்கிடமாகக் கிடந்த பொதி ஒன்றில் வெடிபொருள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இவ்விடயம் குண்டு செயழிழக்கச் செய்யும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. உடன் இடத்திற்கு விரைந்த அவர்கள் குண்டு எனச் சந்தேகிக்கப்பட்ட பொதியை ஆராய்ந்தனர்.

எனினும், சந்தேகித்தது போல் குண்டு இருககவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகளுக்கு பாதுகாப்பான பயண வசதி செய்யுங்கள்!

## அகதிகளுக்கான ஐ.நா.தூதரக பிரதிநிதியிடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

கிளிநொச்சி,ஓக.12

இந்தியாவிலிருந்து சொந்த விருப்பத்தின் பேரில் நாடுதிரும்ப எண்ணும் இலங்கைத் தமிழ் அகதிகள் அத்தகைய பிரயாணத்தில் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்குப் பாதுகாப்பான பிரயாண ஏற்பாடுகளைச் செய்துகொடுங்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகத்தின் இலங்கைக்கான பிரதிநிதி நீல்லைட்டிடம் கேட்டுக்கொண்டார்.

செவ்வாய்க்கிழமை சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், நீல்ரைட்டிற்கும் இடையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

அச்சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடுதிரும்புகின்ற அகதிகளுக்குப் பிரயாண ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கத் திட்டவட்டமானதோர் அமைப்பு இல்லாததால் அகதிகள் பிரயாணத்தின்போது பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

ஐரோப்பியாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர்களைப் பலவந்தமாகத் திருப்பி அனுப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளும் கைவிடப்படவேண்டும். இலங்கையில் நிலையானதோர் அரசியல் தீர்வு எட்டப்பட முன்னர் தஞ்சம் புகுந்த தமிழர்களைப் பலவந்தமாக நாடுகடத்த முயற்சி எடுப்பது தவறானது. அதை ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு எடுத்துக்காட்ட வேண்டும் - என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இவ்விவகாரம் தொடர்பாக நீல்ரைட் கருத்துத் தெரிவிக்கையில்:-

இவ்விடயத்தில் நாம் கூடிய அக்கறை எடுப்போம். அத்துடன், மட்டக்களப்பில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல் மற்றும் சிறுவர்கள் நலன் தொடர்பான விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் - என்றார். (க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஐக்கிய இலங்கைக்குள் தமிழருக்கு அதிகபட்ச சுயாட்சி வழங்கவேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளின் நிலைப்பாடு இது

யாழ்ப்பாணம்,ஓக.12

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களுக்கு அதிகபட்ச சுயாட்சியை வழங்குவதே இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய அரசியல் தீர்வு என்பதே இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளின் நிலைப்பாடு.

- இவ்வாறு தெரிவித்தார் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற்குழு உறுப்பினர் சீதாரம் யெச்சூரி.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரும் முன்னாள் பருத்தித்துறை தேர்தல் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன் கந்தையாவின் பிறந்த தின நினைவுப் பேருரை நிகழ்வு அண்மையில் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 'உலக மயமாக்கல் யுகத்தில் சோஷலிசம்' என்ற பொருளில் சீதாராம் யெச்சூரி உரையாற்றினார். அப்போதே இலங்கைப் பிரச்சினை தொடர்பான இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளின் நிலைப்பாட்டை அவர் மேற்கண்டவாறு விளக்கினார்.

சிறுபான்மை இனங்களுக்கான அதிகபட்ச சுயாட்சியானது நாட்டுக்கு நாடு மாறுபடும். அதனைத் தீர்மானித்துக் கொள்வது அந்தந்த நாடுகளிலேயே தங்கியுள்ளது.

இந்தச் சுயாட்சி எத்தகையது என்பது பிறரால் திணிக்கப்பட்டதாகும். இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் பிறசக்திகள் தலையிடுவதை நாம் எவ்வாறு விரும்பவில்லையோ அதைப் போன்றே இலங்கைப் பிரச்சினையிலும் வெளியார் தலையீடு இருக்கக்கூடாது.

'உலக சனத்தொகையின் மிகப் பெரும்பான்மையினருக்கு எதிராக ஏகாதிபத்தியமானது புதிய தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிடத் தயாராக இருக்கும் நிலையை நாம் தற்போது எதிர்நோக்குகின்றோம்.

இதன் விளைவாக உலகின் முக்கிய முரண்பாடுகள் ஏகாதிபத்தியம் - சோசலிஷம், உழைப்பு - மூலதனம் ஆகியவற்றுக்கிடையில் ஏற்பட்டுள்ளன. அவை தீவிரமடைந்தும் வருகின்றன.

சோஷலிசமே ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்துக்குமான ஒரே மாற்றீடாக இருப்பதால் இத்தகைய முரண்பாடுகளில் பிரதான மையமாக இருப்பவை சோஷலிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாடுகளே ஆகும்.

சோசலிஷ அமைப்பு முறையை உருவாக்குவதே சுரண்டலிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி. மாறாக முதலாளித்துவத்தில் எத்தகைய சீர்திருத்தங்களைச் செய்தாலும் அதைச் சுரண்டலற்ற சமூக அமைப்பாக மாற்றமுடியாது - என்றார் அவர். (ஓ-201)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஓக.12

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 89 ஆவது தொடர் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அலுவலகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் 'சமய வாழ்வு' என்னும் விடயம் தொடர்பாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (எ-5-202)

### மதமாற்றத் தடுப்புச் சட்டம்:

# உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும்!

கொழும்பு,ஓக.12

நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதமாற்றத் தடைச் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் முடிவு ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த விடயம் பற்றி உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை நீதியரசர் ரி.பி.வீரசூரிய தலைமையிலான மூன்ற நீதிபதிகள் குழு அரசமைப்பு ரீதியாக ஆராய்ந்தது.

அதன்படி தமது தீர்ப்பினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார ஆகியோருக்கு நேற்றுக்காலை நீதியரசர் குழுவினர் அனுப்பிவைத்தனர்.

ஜாதிக ஹெல உறுமய எம்.பியான வண. ஓமல் சோபித தேரரினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதமாற்றத் தடைச் சட்டமூலத்திற்கு ஆட்சேபனை தெரிவித்துக் கத்தோலிக்க மதகுருமார் உட்படப் பல தரப்பினரும் 22 மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். (க)

### அரசு கொள்வனவு செய்யும்

# ஆயுதங்களைச் சோதனையிட கடற்படைக்குழு சீனாவுக்கு!

அதிவேகத் தாக்குதல் படகுகள் உட்படப பல்வேறு ஆயுதத் தளபாடங்களைச் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்குத் தீர்மானத்துள்ள இலங்கை அரசு, அந்தத் தளபாடங்கள் மற்றும் ஆயுதங்களை சோதனையிடுவதற்காகத் தனது கடற்படையின் உயர்மட்டக் குழு ஒன்றைச் சீனாவுக்கு அனுப்பியுள்ளது.

அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான மூன்று உறுப்பினர்கள் அடங்கிய கடற்படைக் குழுவே நேற்று சீனா சென்றடைந்துள்ளது.

சீனாவிலிருந்து ஆயுதத் தளபாடங்களை விநியோகித்து வந்த நிறுவனங்களுடான தனது ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசு கடந்த வாரமே புதுப்பித்தது. அதையடுத்தே, இப்போது ஆயுதச் சோதனைக்காக உயர்மட்டக்குழு இங்கிருந்து சீனா விரைந்திருக்கிறது.

2002 பெப்ரவரியில் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், அரச தரப்பில் இப்போது தான் பெரும் எடுப்பிலான ஆயுதக் கொள்வனவு மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசுப் படைகளுக்கு சிறியரக ஆயுதங்களை விநியோகிப்பதில் சீனாவே முன்னணியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கிரானில் நேற்று அதிகாலை தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

ஏறாவூர்.ஓக.12

வாழைச்சேனை, கிரானில் நேற்று அதிகாலை தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் கிரான், கும்புறுமூலையைச் சேர்ந்த சிவராசா சிவசீலன் (வயது - 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கிரான் கூட்டுறவுச் சங்க முகாமையாளராகக் கடமையாற்றிய இவர் தனது வீட்டிலிருந்த வேளை, நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்கள் அடங்கிய குழுவொன்று இவரது வீட்டைச் சுற்றிவளைத்து, இவரைக் கடத்திச் சென்றுள்ளனர். இதன்போது அவரது தகப்பன் மற்றும் மூத்த சகோதரி ஆகியோர் ஆயுத பாணிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு அப்பகுதிக்குச் சென்று பார்த்துள்ளனர். கிரான் தபாலகத்துக்கு அண்மையில் சூட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலத்தைக் கண்டுள்ளனர்.

இவரது சடலம் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்காக நேற்றுக்காலை வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைச் சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அண்மைக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களின் தொடர்ச்சியாக இக்கொலையும் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

# மாணவிகள் பூனைகளாகியதால் இந்தியப் பாடசாலை மூடப்பட்டது

புதுடில்லி,ஓக.12

மாணவிகள் பூனையின் பழக்க வழக்கத்துக்கு மாறியதால் பாடசாலை ஒன்று மூடப்பட்டதாக 'சஹாரா டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இந்தியாவின் ஒரிசா மாநிலம், பாலசோர் மாவட்டம் - சோரோ பகுதியில் உள்ள போல கோபிந்தா மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் பூனைகளாக மாறியதால் மூடப்பட்டது.

இங்கு கற்றுவந்தவரான ஒரு மாணவி வகுப்பறையில் இருந்தபோது திடீரென்று கைகளைக கால்கள் போன்று நிலத்தில் ஊன்றி - நாலு கால்களில் பூனை போன்று "மியாவ் மியாவ்' என்று கத்தியபடியே பதுங்கிப்பதுங்கி நடக்க ஆரம்பித்தார். அத்துடன், சகமாணவிகளை கைவிரல் நகங்களால் பிறாண்டவும் தொடங்கினார்.

இச்சம்பவத்தின் பின் மேலும் பல மாணவிகள் பூனையின் பழக்க வழக்கத்துக்கு தினமும ஒவ்வொருவராக மாற ஆரம்பித்தனர்.

இதனால், அச்சமுற்ற பாடசாலை நிர்வாகிகள் - மருத்துவர்கள், மதகுருமார்கள், மந்திரவாதிகள் எனப் பலரையும் நாடிவருகின்றனர். ஆனாலும் பிரச்சினைத் தீரவில்லை.

இதற்கிடையில் இது குறித்து அறிந்த மாவட்டக் கல்வி அதிகாரி பாடசாலையை மூடிவிடும்படி உத்தரவிட்டுள்ளார். மாணவிகளின் பெற்றோர்களோ இது பேய், பிசாசுகளின் வேலை என்ற நம்பிக்கையில் பேயோட்டிகளைக் கூட்டி வந்து பூசை போடுகின்றனர் - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# நெடுந்தீவில் நேற்று எதிர்ப்புப் போராட்டம்

நெடுந்தீவு,ஓக12

உதவிப்பொருள் வழங்கலில் முறைகேடு இடம்பெற்றதாகத் தெரிவித்து நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை முன்றிலில் நேற்று முழுநாளும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெற்ற இப்போராட்டத்தில் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து நேற்று உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றினால் பொதுமக்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. மீளக்குடியமர்ந்தோர் மற்றும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டோருக்கே அவை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

உதவிப் பொருள்கள் வழங்குவதற்கான பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட விதத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தே பொதுமக்கள் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

இப்போராட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நெடுந்தீவு உதவி அரச அதிபர் உறுதியளித்ததை அடுத்து இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். (எ-9-11?)

## டிப்ளோமா கற்கை நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.12

மட்டக்குளி உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 0112521152 என்ற தொலைபேசி எண்ணுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10)

# பிரான்ஸ் சத்திரசிகிச்சை நிபுணரின் பணி மந்திகை வைத்தியசாலையில் நிறுத்தம்

வடமராட்சி,ஓக.12

உலக சுகாதார நிறுவனத்தினால் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவுக்குக் கடந்த ஒரு வருடகாலமாக வழங்கப்பட்டு வந்த சத்திர சிகிச்சை நிபுணரின் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலைக்குச் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் இன்மையால் கடந்த காலங்களில் சுமார் 15 வருடங்கள் பிரான்ஸ் வைத்தியக்குழுவினரால் சத்திரசிகிச்சை நிபுணத்துவ சேவையும் மற்றும் மருத்துவ உபகரணங்கள், மருத்துவப் பொருள்களும் வழங்கப்பட்டு வந்தன.

இக்குழுவின் சேவை நிறுத்தப்பட்டதும் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் இல்லாதிருந்த வேளை உலக சுகாதர நிறுவனம் கடந்த ஆண்டு ஜூலை முதல் சத்திர சிகிச்சை நிபுணத்துவ சேவையை வழங்கியது.

இச்சேவையில் ஏற்கனவே பிரான்ஸ் வைத்தியக்குழுவில் இணைந்து பணியாற்றிய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வி வரோனிக்கா, மயக்க மருந்துவ நிபுணர் டாக்டர் பியர் ஆகியோர் உலக சுகாதார சேவை நிறுவனத்தினால் இவ்வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டு சத்திர சிகிச்சை வைத்திய சேவைகளைச் செய்துவந்தனர். இவர்களது சேவை ஒருவருடத்துடன் பூர்த்தியானதும் கடந்த வாரம் முதல் சத்திர சிகிச்சை நிபுணத்துவ சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் செல்வி வரோனிக்கா தனது தாயகமான பிரான்ஸ் நாட்டுக்குத் திரும்பியுள்ளார்.

ஆனால், மயக்க மருந்து வைத்திய நிபுணர் டாக்டர் பியர் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டுள்ளார். இன்னும் ஒரு சில மாதங்கள் வரை தங்கியிருக்கும் இவர், தற்போது காயங்களுடன் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு முதலுதவிச் சிகிச்சைகளை வழங்கி அவர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்து வருகிறார்.

தற்போது சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் இன்மையால் சத்திர சிகிச்சைப் பிரிவு சரிவர இயங்கவில்லை. எனினும், மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் உதவி வைத்திய அதிகாரியினால் சிறுசிறு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-173)

# சாயி சிந்தனை

## இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணாதீர்



அனைத்தும் உனக்குள்ளேயே மறைந்து இருக்கின்றது. பிரபஞ்சம் முழுவதும் உன் இதயத்தினுள் இருக்கிறது. உன்னிடம் இல்லாததொன்றை வெளியில் இருப்பதாகக் கருதுவது அறிவிலித்தனம். நீயே பிரபஞ்சத்தின் வடிவம். நீயே விராட வடிவினன். ஏனெனில் உன்னிடம் ஆகர்ஷண சக்தி இருக்கிறது. "ரமேதி இதி ராமஹா" அனைவரையும் வசீகரிக்கும் ஆற்றல் பெற்றவன் இராமன். இரும்பைக் கவரும் ஆற்றல் பெறறது எது? என்று எந்த மாணவனைக் கேட்டாலும் அவன் காந்தம் என்று விடையளிப்பான். காந்தத்திற்கு மட்டும் இரும்பை ஈர்க்கும் சக்தி உள்ளது என்று நினைக்கிறோம். அதை மட்டுமே காந்தம் என்கிறோம். நமது வாழ்க்கையே ஒரு காந்தம். நாம் குழந்தைகளை ஈர்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன?

நாம் குழந்தைகளிடம் காட்டும் அன்புதான் குழந்தைகளை நம்மிடம் ஈர்க்கின்றது. தேனமலரை நாடி வருவதேன்? மலரில் உள்ள தேன் தேனீயை அங்கு வரும்படி செய்கிறது. தேன் எது? தேன் தான் அன்பாகும். அன்பு என்னும் தேன் எல்லோரையும் ஈர்க்கின்றது. தேனீயைக் காந்தம் எனலாமா? தேனையும் மலரையும் காந்தம் எனலாம். கணவனையும் மனைவியையும் காந்தம் எனலாம். தாய்க்கும் குழந்தைக்கும் இடையே உள்ள அன்பைக் காந்தசக்தி எனலாம். எப்பொருளும் வேறு ஏதாவது ஒன்றால் ஈர்க்கப்படுகிறது. உலகம் அனைத்தும் காந்த வடிவேயாகும். காந்தசக்தியிலிருந்து மின்சக்தி உருவாகிறது. மின்சக்தி ஒளியைத் தருகிறது. மனித உடல் மின்சக்தி ஆகும். கண்கள் மின்சக்தி. ஒவ்வோர் அம்சமும் மனிதனின் உடலிற்குள் இருக்கிறது.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

உதயன்

# கருணாவிடமிருந்து வரும் நொண்டிச் சாட்டு

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வழங்கிய அதிகாரத்தையும், பதவியையும் வைத்துக் கொண்டு கிழக்குப் போராளிகளின் தனித்துவத் தளபதி தானே என்று சுயமாகப் பிரகடனப்படுத்தி 41 நாள்கள் கிழக்கில் 'வாய்வீச்சு'க் காட்டிய கருணா, தனது தளத்தை விட்டு ஓடித்தப்பி நான்கு மாதங்களாகி விட்டன.

அதன்பின்னரும், அவர் கூறியவை என்ற பெயரில் அவரது வாய்ச் சவால்களுக்கு - சில, பல கருத்துகளுக்கும் சுயபிரபலாபங்களுக்கும் - களம் அமைத்துக்கொடுத்த ஓரிரு ஊடகங்களில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் ஒருவரால் தாய்லாந்துத் தலைநகர் பாங்கொக்கிலிருந்து நடத்தப்படும் இணையத்தள சஞ்சிகையான 'ஏஸியா ட்ரிபியூன்' முக்கியமானது. கருணா விவகாரம் மட்டுமல்ல, பொதுவாகப் புலிகள் எதிர்ப்புத் தமிழ்ச் செய்திகளுக்கு விழுந்தடித்து - உப்புப்புளி சேர்த்து - முன்னுரிமை கொடுப்பதில் தனிநிகரான சஞ்சிகை இது.

இந்தச் சஞ்சிகையில் மீண்டும் ஒருதடவை கருணாவின் பெயரில் கதை அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்காக் கடற்படையினரின் மறைமுக உதவியோடுதான் தன்னைக் கிழக்கிலிருந்து துரத்தியடித்தார்கள் என்றும் கடற்படை உதவியிருக்காவிட்டால் தம்மைக் கிழக்கிலிருந்து அகற்றியிருக்கவே முடியாது என்ற பாணியிலும் கருணா கூறினார் என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

2002 முற்பகுதியில் அப்போதைய ஐ.தே.முன்னணி அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்தது. ஆனாலும், புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் ஆங்காங்கே முறுகல் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தமை அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

அதுவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் தொடர்ந்து முறுகல் நிலை நிலவி வந்தது என்பது பிரசித்தமான விடயம். அப்போதைய பிரதமர் ரணிலின் கட்டுப்பாட்டில் - வழிகாட்டலில் - கடற்படையினரும், அவர்களது தளபதியினரும் இல்லை என்றும், நேரடியாக ஜனாதிபதியின் உத்தரவுகளுக்குக் கடற்படையினர் முன்னுரிமை கொடுப்பதால் ரணிலின் அரசினால் இதுவிடயத்தில் கடற்படைப் போக்கைக் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது என்றும் கூட அப்போது விமர்சிக்கப்பட்டு வந்தது.

அதுமட்டுமல்ல, யுத்தநிறுத்த காலத்தில் புலிகள் விடயத்தில் கடற்படையினர் காட்டும் தீவிரப்போக்கினால் யுத்தநிறுத்தத்துக்கு ஆபத்து ஏற்படும் என்றும் கூட அப்போது எச்சரிக்கப்பட்டு வந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அந்தக் கடற்படைதான் புலிகளோடு சேர்ந்து சதிக்கு ஒத்துழைத்து, கருணா குழுவை ஆயுதரீதியாக - இராணுவ வலிமை மூலமாக - அழித்தொழிக்கக் காரணமாயிற்று என்று 'ஏஸியா ட்ரிபியூன்' மூலமாகக் 'கதைவிட' முயல்கிறார் கருணா.

கருணா கும்பல் கிழக்கில் அட்டகாசம் செய்த காலத்தில் அவர்கள் நிலைகொண்டிருந்த கிழக்குப் பிராந்தியத்தின் மீது அதிரடிப் பாய்ச்சல் ஒன்றைப் புலிகளின் போராளிகள் ஆரம்பித்ததும், அதுவரை காலமும் தென்னிலங்கை மற்றும் இந்திய ஊடகங்கள் மூலமாகப் பெரும் வாய்வீச்சும், வாய்வீரமும் காட்டி வந்த கருணா ஒருநாள் கூட நின்று, நிதானித்து, முகங்கொடுத்து மோதாமல், 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று ஓடித் தப்பினார்.

தலைவர் பிரபாவின் போராளிகள் தமது பக்கம் தாக்குதலைத் தொடுத்தால் பார்க்கிறேன் ஒரு கை என்று கருணா வீறாப்புப் பேசியபோது, தென்னிலங்கையும், இந்தியாவும் திறந்த வாய்மூடாது கருணாவை ஆச்சரியத்துடன்தான் பார்த்தன. ஆனால், அப்பேச்சுகள் எல்லாம் ஒரேநாளில் 'புஸ்வாணம்' ஆனபோதுதான் கருணாவின் வாய்ப்பந்தல் என்னவென்பது அவற்றுக்குப் புரிந்தது.

புலிகளின் ஊடுருவலுக்கு ஓடி ஒளித்துத் தப்பிப் பிழைக்கக் கூட முடியாமல் அல்லாடும் கருணாவும், அவரது ஒரு சில சகாக்களும் இந்தநிலையில் - இன்னும் கூட - தாங்கள் வெற்றுவேட்டு முழக்கப் போக்கைக் விட்டுவிடவில்லை என்பதைத்தான் 'ஏஸியா ட்ரிபியூனில்' கருணாவின் பெயரில் அவிழ்த்துவிடப்பட்ட 'கதைகள்' காட்டுகின்றன.

'ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை' என்று நொண்டிச் சாட்டுக் கூறுவதுபோல, ஓடித் தப்பி ஒளித்த கருணா, ஏதோ ஸ்ரீலங்கா கடற்படை புலிகளுக்கு ஒத்துழைத்திருக்காவிட்டால் தம்மை வீழ்த்தியிருக்க முடியாது என்று கற்பனைக் கதை விடுகிறார்.

வெளிநாட்டிலிருந்து பொழுதுபோக்குக்கு ஊடகம் நடத்தும் தமிழர்களுக்குக் கருணாவின் இந்தப் புளுகு புதுமையாய் இருக்கலாம். ஆனால், கருணாவின் இந்த 'அளப்புகளை' இனியும் கருத்தில்கூட எடுப்பதற்கு ஈழத் தமிழர்கள் முட்டாள்கள் அல்லர்.

# உலகத் தொழில்நுட்பங்களோடு போட்டிபோடும் நிலையில் நாம்

## வன்னி தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு விழாவில் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,ஓக.12

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுபபிள்ளை பிரபாகரனின் சிந்தனையின் பயனாக வன்னியில் உருவாகிய வன்னி தொழில்நுட்ப நிறுவனம் இன்று தனது முதலாவது தொகுதி மாணவர்களை வெளியேற்றுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சியில் நடைபெற்ற வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்களின் பட்டமளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: போராட்ட சூழலில் முழுமையாக மூழ்கியிருந்த நாம உலகில் மாறிவருகின்ற தொழில்நுட்பத்துடன் ஈடுகொடுக்க முடியாது இருந்தபோது, அமெரிக்கா வாழ் புலம்பெயர்ந்த மக்களின் உதவியினால் வன்னியில் இந்த தொழில்நுட்ப நிறுவனம் உருவாக்கப்பட்டது.

நாம் எமது தேசத்தை மீட்கப் போராடிக் கொண்டிருந்தபோது எதிரியானவன் எமது மாணவர்களின் கல்வியை நசுக்குவதிலேயே தீவிரமாக ஈடுபட்டான்.

இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழலில எமது மண்ணிலும் உலகத் தொழில் நுட்பங்களோடு போட்டிபோடும் அளவிற்கு வன்னித் தொழில்நுட்ப நிறுவனம் தனது சேவையை வழங்கி வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது - என்றார் தமிழ்ச்செல்வன்.

கடந்த ஞாயிறு முற்பகல் 10.20 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் விழா நிகழ்வு தொழில்நுட்பவியல் நிறுவன முதல்வர் சிவகோபால் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் ஏற்றிவைத்தார். சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன், யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து அமெரிக்க தமிழ்த் தொழில்நுட்பவியல் நிறுவனப் பிரதிநிதி உரை நிகழ்த்தினார். தொழில்நுட்பவியல் பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை பேராசிரியர் மோகனதாஸ் வழங்கிக் கௌரவித்தார்.(ஐ)

# விவசாய அபிவிருத்தி தொடர்பான கண்காட்சியும் விற்பனையும்

வலி.தெற்கு,ஓக.12

விவசாய அபிவிருத்தி தொடர்பான கண்காட்சியொன்றும் விவசாயப் பொருள்கள் விற்பனையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாத முதல் வாரத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் இவை இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கமநல சேவை நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள், போன்றவற்றின் ஒத்துழைப்பை இக்கண்காட்சி விற்பனை நிகழ்வுக்கு வழங்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்திப்பொருள்களை கண்காட்சிக்கு உட்படுத்துமாறும் கண்காட்சியில் கலந்துகொள்ளுமாறும் அவர் வேண்டியுளளார்.

கண்காட்சியின்போது தமது உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்த விரும்பினால் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாகத் தமக்குத் தெரிவிக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (10-152)

### வில்லூன்றியில் தீர்த்தம்

யாழ்ப்பாணம்,ஓக.12

ஆடி அமாவாசைத் தினமான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தத்தில் வழமைபோன்று சமய அனுஷ்டானங்களும் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் காலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளை மற்றும் பூசைகள் நடைபெற்று 8.15 மணிக்கு புனித தீர்த்தத்தில் விநாயகப் பெருமான் தீர்த்தமாடுவார்.

அதனைத் தொடர்ந்து பக்தர்கள் அமாவாசைத் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# வாக்காளர் இடாப்பில் புதிதாக பெயர் பதிவு இன்றுமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.12

வாக்காளர் இடாப்பில் புதியவர்களைப் பதிவுசெய்யும் பணி இன்று முதல் இடம்பெறும் என யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் வதியும் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதியும் தகுதி பெற்றவர்கள்.

இப்பதிவுகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவுசெய்வதற்கு தகுதியுடையவர்கள் தமக்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இவ்வாறு பதிவுசெய்யப்படும் வாக்காளர்களைப் பட்டியலிடும் நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஜனவரி முதல் மேற்கொள்ளப்படும். அதன்படி, வாக்களிக்கும் உரிமை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் - என்றார்.

இதேவேளை - வாக்காளர் இடாப்பில் ஏற்கனவே பெயர்களைப் பதிவு மேற்கொண்டவர்கள் பதிவுகளில் ஏதாவது திருத்தம் செய்யவேண்டுமானால் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# இளைஞர் சேவைகள் மன்ற விருது வழங்கல் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.12

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடம்தோறும் நடத்தப்படும் இளைஞர் விருது வழங்கல் போட்டி இந்த வருடமும் நடைபெறவுள்ளது.

இளைஞர் விருதுக்கான போட்டியில் 17 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்ட சகல இளைஞர், யுவதிகளும் பங்குகொள்ள முடியும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்களும் அவர்களுடைய குடும்பத்தவர்களும் இப்போட்டிகளில் பங்குபற்றமுடியாது.

குறுநாடகம், பரதநாட்டியம், கிராமிய நடனம், இளம்பாடகர், கிராமிய பாடல், நிர்மாணிப்பு நடனம், இஸ்லாமிய கீதம், இஸ்லாமிய கவிதை, சாஸ்திரிய பாடல், சாஸ்திரிய வாத்தியம், மேற்கததய வாத்தியம், அறிவிப்பாளர், பேச்சு, கவிதை, சிறுகதை, பாடல் இயற்றுதல், கட்டுரை, சிறுவர் இலக்கியப்படைப்பு, தொலைக்காட்சி நாடகப்பிரதியாக்கம், சித்திரம், சிற்பம், புகைப்படக்கலை போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிக்கான விண்ணப்படிவங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில 'இளைஞர் விருது 2004' என்பதையும் உரிய போட்டியினையும் உரிய மாவட்டத்தினையும் குறிப்பிட வேண்டும்.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் 'உதவிப் பணிப்பாளர், நுண்கலைத்திறன் அபிவிருத்திப் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இல 65, ஹைலெவல் வீதி, மகரகம' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

# மலையக இளைஞர், யுவதிகள் 3,000 பேருக்கு ஆசிரிய நியமனம்

கொழும்பு,ஓக.12

பெருந்தோட்டத்துறை இளைஞர், யுவதிகள் மூவாயிரம் பேருக்கு தொழில் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை மொனராகலை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

நுவரெலியா மாவட்ட விண்ணப்பதாரிகளில் ஒரு தொகுதியினருக்கான நேர்முகப்பரீட்சைகள் ஏற்கனவே ஜூலை31, ஓகஸ்ட் 1,7,8 ஆகிய திகதிகளில் முடிவுற்றுள்ளன.

நேர்முகப்பரீட்சை நியமனம் வழங்கல் தொடர்பாக இணைப்பாளர்களாக எவரும் நியமிக்கப்படவில்லை. ஏமாற்றும் பேர்வழிகளிடம் ஏமாற வேண்டாம் என சமூக அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் கலாநிதி பிர்தாப் இராமானுஜம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுவரை மலையகத்தில் ஜி.சீ.ஈ உயர்தரத்தகுதியுடைய இளைஞர், யுவதிகள் இல்லை என்றும் - அதனாலேயே மலையகப் பாடசாலைகளுக்கான ஆசிரியர்களை நியமிக்கமுடியாமல் போய்விட்டது என்றும் - உண்மைக்கு மாறான தகவல்கள் வெளியிடப்பட்டு வந்தன. மலையக அரசியல்வாதிகளும் இந்தத் தவறான கூற்றுக்கு ஒத்து ஊதியே வந்துள்ளனர். ஆனால், ஜனாதிபதியின் நேரடிப்பணிப்புரையின் பேரில் எமது அமைச்சின் மூலம் மலையகத்தில் படித்த இளைஞர், யுவதிகளின் விவரங்களைத் திரட்டியுள்ளோம் - என்று தெரிவித்தார். (ஐ-க)

### நாளை

ஆடி 29
வெள்ளிக்கிழமை
(13.08.2004)
திதி : திரயோதசி
பின்னிரவு 4.54 வரை.
நட்சத்திரம் : புனர்பூசம்
பின்னிரவு 5.10 வரை.
சுபநேரம்: 6.05 - 7.35
ராகுகாலம்: 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

# சிறுவர் பாதுகாப்புக் குழுவினால் மதத்தலைவர்களுக்குப் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஓக.12

யாழ்.மாவட்டத்தில் உள்ள மதத்தலைவர்களுக்கான ஒருநாள் பயிற்சிப்பட்டறை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினால இன்று நடத்தப்படவுள்ளது.

மேற்படி பயிற்சிப்பட்டறை இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இலக்கம் 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்பு பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மதத்தலைவர்கள் பங்குபற்றலாம் என்று மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (10-201)

### உதயவாக்கு

பொறாமையை ஒழித்தால் நிறைய விடயங்களைச் சாதித்துக் காட்டலாம்.

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் புதன்கிழமை, ஓகஸ்ட்-11-2004

| சந்தைப் புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1443.31 | 1440.60 | 3.25 | 0.23 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2144.44 | 2136.69 | 7.75 | 0.36 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1492.37 | 1488.69 | 3.68 | 0.25 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2225.66 | 2217.61 | 8.05 | 0.36 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 215 | 209.6 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 13.2 | 16.3 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 3373 | 3639 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 352.7 | 355.6 | | |

**இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள்**

| கம்பனி பெயர் | பங்கிலாபம் (%) | XDதிகதி | பணம் செலுத்துகை |
|---|---|---|---|
| பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் வங்கி | 15% கடைசி | 16.09.2004 | 29.09.2004 |

*குறிப்பு: நி.ச.இ. விலை - நிறையிடப்பட்ட சராசரி இறுதி விலை.

### கலந்துரையாடல

யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் ஆராயப் படவுள்ளதால்முதலாம் இரண்டாம் வருட மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளு மாறு உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றியத் தலைவர் வேமுருக தாஸ் கேட்டுள்ளார். (ஜ-5)

### வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் ஸ்ரீதரின் நெறிப்படுத்தலில் உருவான "சுமைதாங்கி"என்னும் தமிழ்த் திரைப்படம் வீடியோக்காட்சியாகக் காண்பிக்கப் படவுள்ளது.

படத்தின் இறுதியில் எழுத்தாளர் அயேசுராஜா தலைமையில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெற முடியுமெனஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (10)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஓக.12

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த 6ஆம்திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.45மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறுவதுடன் மகோற்சவம் நிறைவுறும். (10-173)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஓக.12

இளவாலை நாதோலை முத்துமாரி அம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை நவரோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்று காலை எட்டுமணிக்கு சங்காபிஷேகமும், மாலை 5மணிக்கு வசந்தமண்டபப் பூசையும், திருவூஞ்சலும் நடைபெற்று, அம்மன் வீதி உலா வருவார். (ஜ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.12

ஏழாலை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த லட்சார்ச்சனை நாளை வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை காலை 10மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும். (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.12

இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி லிங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9 தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10.45 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (10)


NE-TECH

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

AUGUST - 18-08-2004

இன்று முதல் பதிவுகளை மேற்கொள்ளலாம்

- Computer Basic Course - 1Month Rs.750/=
- Computer Hard Ware Engineering - 5 Days - Intensive Rs.1800/=
- Computer Net Working - 5 Days - Intensive Rs.1800/=
- Diploma in MS Office - 1Month Rs.1500/=

O.L.R. Church, 4th cross Street, Jaffna.

NORTH EAST TECHNOLOGIES No.34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA. T.P.: 021 - 2223786.

(C/36572) (26-12-17)

**ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட PI, PII, PIII**

IBM, Compaq, Samsung கணனிகள் குறைந்த விலைகளில்!

| | |
|---|---|
| PI-200 Mhz-Samsung (Tower) | 12,900/= |
| PI-200 Mhz-IBM,Compaq | 13,900/= |
| PII-266 Mhz-IBM | 15,900/= |
| PII-333 Mhz-Compaq | 22,900/= |
| PII-350 Mhz-Compaq | 23,000/= |
| PII-350 Mhz-Compaq (Tower) | 23,900/= |
| PIII-450 Mhz-IBM | 25,900/= |
| PIII-550 Mhz-Samsung (Tower) | 31,900/= |

CLEARANCE SALE - August 31st வரை

NORTH EAST TECHNOLOGIES (PVT)LTD.

34, Saddanathar Road, Nallur, Jaffna.

T.P: 021-2223786, 0777-708498 (hotline)

(C/36573)(42-12-17)


**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 602 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 10-08-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4858809-4874396 |

வெற்றி இலக்கங்கள்: 05 20 28 30

லக்கினம்: கன்னி

ஜக்பொட் பரிசு ரூபா.65,65,600/- வெல்லப்படவில்லை. இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 69,54,200/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தம் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,47,951 | 10/- | 34,79,510/- |
| 2.இலக்கங்கள் | 32,005 | 20/- | 6,40,100/- |
| 1.இல + லக்கினம் | 31,665 | 30/- | 9,49,950/- |
| 2.இல + லக்கினம் | 2,672 | 100/- | 2,87,200/- |
| 3.இலக்கங்கள் | 858 | 500/- | 4,29,000/- |
| 3.இல + லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 65,65,600/- | - |
| மொத்தம் | 4,15,428 | - | 65,50,760/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 65,50,760/-

4860426-2-39
4861117-7-84
4868892-4-39
4868554-7-41
4859695-5-77

காசாளர் தேவை

பிரபல வியாபார நிறுவனம் ஒன்றுக்கு காசாளர் உடனே தேவை. (வயது 50க்கு மேல்) தொடர்பு: இல.55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (35169)

### தவறிவிட்டது

உரும்பிராயைச் சேர்ந்த கு.இராசநாயகம் என்பவரது மோட்டார் வாகன ஆவணங்கள், சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பன யாழ் சிவகுரு மெடிக்கல் கிளினிக்குக்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், நியூ லலிதாஸ் ஜுவல்லறியில் ஒப்படைத்து உதவும். சன்மானம் வழங்கப்படும்.

கு.இராசநாயகம் (அதிபர்), மல்லாகம் விசாலாட்சி மகாவித்தியாலயம்

(35168)


**தூரிகை நுண்கலை வளாகம்**

(பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்)

புதிய பிரிவு

**பயிற்சி வகுப்புகள்**

16.08.2004 திங்களன்று ஆரம்பமாகின்றன!

கேக் ஐசிங், பூ வேலை தலையலங்காரம், ஒப்பனை, துணிவர்ணமிடல், தையல், ஓகன், ஓவியம், பிறிண்டிங

- பயிற்சி முடிவில்தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்
- பயிற்சிக்குரிய கட்டணம் ரூ. 500/= மட்டும்
- பிரத்தியேகமாக துரித (1மாதம்) பயிற்சிகளும் வழங்கப்படும்.

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

செங்குந்தா வீதி, கல்வியங்காடு. ம.ம.வி.வீதி, நெல்லியடி. (C/36571)(42-12-17)


### எழுதுமட்டுவாழ் குடும்பங்களின் உணவு முத்திரை மீளாய்வு

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களின் உணவு முத்திரை மீளாய்வு எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (8-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருந்திய அழைப்பும்

தோற்றம் 21 05 1926



மறைவு 13 07 2004

**அமரர் பொன்னையா யோகலிங்கம்**

(இளைப்பாறிய வைத்திய அதிகாரியும், சமாதான நீதிவானும்)

*காணும் இடம் எல்லாம் உமது உருவே கேட்கும் ஒலியெல்லாம் உமது குரலே*
*மறக்க முடியவில்லை தந்தையே நின்றது போல் நின்று*
*நெடுந்தூரம் சென்றாயே உன் நினைவினாலே*
*உடல் தளர்ந்து போனதையா எமது துயர் தனை தீர்க்க நீ*
*இங்கு இல்லை ஐயா கேட்டதெல்லாம் தந்த லண்டன் முத்துமாரியம்மன்*
*உன்னை நெடுங்காலம் வைத்திருக்க மறுத்த காரணம் என்னவோ?*

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (12.08.2004) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'கோவிந்தவாசா' பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மக்கள், மருமக்கள், யோகவதனி, விஜயகுமரன், ஜெய்ந்தினி, சிறிஸ்காந்தராஜா, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் (U.K). 0044208 7674623

(35170) (40-12-17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருணாசலம் முத்தம்மா

(மாவிட்டபுரம்) (இராசு அக்கா)



தம்பாதம்பி ஒழுங்கை, பளை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி அருணாசலம் முத்தம்மா 10.08.2004 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற அருணர்-பொன்னையாவின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா அருணாசலத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம், சிவலோகசுந்தரம் மற்றும் மோகனேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லையா நாகராஜாவின் (டென்மார்க்) அன்பு மாமியாரும் சஜித்தா, சுரேன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, செல்லம்மா மற்றும் வள்ளிப்பிள்ளை (கனடா) காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாம்பிகை (ஆசிரியர்), அற்புதமலர், விமலாம்பிகை (சமுர்த்தி உத்தியோகத்தர், மந்துவில் வடக்கு) ஆகியோரின் அன்பு மாமியாரும் வைத்திலிங்கம் இராசரத்தினம் (கிராம அலுவலர், சாவகச்சேரி நகரம் J/300), கந்தசாமி, இராஜேஸ்வரி ஆகியோரின் பெரிய தாயாரும் ருக்மணிதேவி இராசரத்தினத்தின் (பிரதி அதிபர், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.08.2004) வியாழக் கிழமை மு.ப.10.00 மணிக்கு தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேம்.

தகவல்: வை.இராசரத்தினம (பேறாமகன்) கிராம அலுவலர், சாவகச்சேரி நகரம் J/300

*தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.* (C/36574)(43-12-17)

### செல்வி தம்பிஐயா பரமேஸ்வரி



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 426/3, கில்னர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தம்பிஐயா பரமேஸ்வரி நேற்று (11.08.2004) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, உருத்திராபதி (ஜேர்மன்.வாழ்) மற்றும் அம்பிகாபதி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லம்மா, அருந்தவராணி ஆகியோரின் மைத்துனியும் குமுதினி (ஜேர்மன்), பரணதரன், கனகாம்பரம், தரணிதரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிதம்பரநாதன் (ஜேர்மன்), செல்வமூர்த்தி, ஜெயாழினி, பாலராணி, ஜெயாமினி, பாலசிறி ஆகியோரின் பெறாத் தாயாரும் சைலோ (ஜேர்மன்), பினகாஸ் (ஜேர்மன்), ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2004) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கி.பரண்தரன (மருமகன்)

*426/3, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.* (35171)(43-12-17)

# வைகோ மீதான 'பொடா' வழக்கு வாபஸ்



சென்னை,ஓக.12

தமிழகத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ உட்பட 9 பேர் மீது பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (பொடா) கீழ் தொடர்ந்திருந்த வழக்கைத் தமிழக அரசு திரும்பப்பெற்றது.

அதற்கான மனுவை, பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றத்தில் அரசுத் தரப்புச் சட்டத்தரணி ஜெயக்குமார் கடந்த திங்கட்கிழமை தாக்கல்செய்தார்.

எதிர்வரும் 26ஆம் திகதி வைகோ மீதான வழக்கு விசாரணைக்கு வரும்போது, அரசின் இந்த மனுமீது நீதிபதி எல்.ராஜேந்திரன் என்ன முடிவுஎடுக்கிறார் என்பது தெரியவரும்.

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி நடந்த ம.தி.மு.க. பொதுக்கூட்டத்தில் வைகோ பேசினார். "விடுதலைப் புலிகளை நேற்றும் ஆதரித்தேன்; இன்றும் ஆதரிக்கிறேன்; நாளையும் ஆதரிப்பேன்" என்று பேசியதை அடுத்து வைகோ மீது பொடாச் சட்டத்தின் 21 ஆவது பிரிவின்கீழ் தமிழக அரசு வழக்குத் தொடர்ந்தது.

மேலும், ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு மாவட்டச் செயலர் அ.கணேசமூர்த்தி, சிவகங்கை மாவட்டச் செயலர் புலவர் செவந்தியப்பன், முன்னாள் எம்.எல்.ஏ. பி.எஸ். மணியம், வீர.இளவரசன், வழக்கறிஞர் அழகு சுந்தரம், புதூர் பூமிநாதன், மதுரை கணேசன், நாகராஜன் ஆகிய 8 பேர் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அமெரிக்காவில் சிக்காக்கோ தமிழ்ச் சங்க நிகழ்ச்சியில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய வைகோ, 2002 ஜூலை 11 இல் சென்னை விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இதனிடையில், பொடா சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் நீதிபதி ஜகாரியா தலைமையில் பொடா மறு ஆய்வுக் குழுவை மத்திய அரசு அமைத்தது.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க.தலைவர் கருணாநிதி உள்ளிட்டோரின் வேண்டுகோளை ஏற்று, 577 நாள்கள் சிறைவாசத்துக்குப் பிறகு கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி பிணையில் விடுதலையானார் வைகோ.

பொடா சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது பொடா சட்டத்தின் கீழ் குற்றமாகாது என்று கூறியது.

வைகோவின் புகாரை விசாரித்த பொடா மறு ஆய்வுக் குழு, வைகோ மீதான வழக்கில் அடிப்படை முகாந்திரமே இல்லை என்று கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி தீர்ப்புக் கூறியது.

இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் சென்றது தமிழக அரசு. பின்னர், பொடா மறு ஆய்வுக் குழு உத்தரவு மீது அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்தார் வைகோ. பூந்தமல்லியில் நடந்துவந்த விசாரணைக்கு உயர் நீதிமன்றம் தடைவிதித்தது.

இதனிடையில், மறு ஆய்வுக் குழுவின் உத்தரவைப் பரிசீலிக்குமாறு, அரசுத் தரப்புச் சட்டத்தரணிக்குத் தமிழக அரசின் தலைமைச் செயலர் கடந்த மேமாதம் 8ஆம் திகதி கடிதம் எழுதினார்.

அதன் அடிப்படையில், வழக்கை மீளப் பெறுவதாக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார் அரசு சட்டத்தரணி.

(ஒ)

## திருமங்கலத்தில் தொடங்கிய போர்

தமிழகத்தின் திருமங்கலத்தில் பேசிய பேச்சுத்தான் வைகோவுக்கு 19 மாதச் சிறைவாசத்தைப் பரிசாக அளித்தது.

அதே திருமங்கலத்தை வைகோவின் நடைப்பயணம் தொட்ட நாளான நேற்றுமுன்தினம் அவர் மீதான பொடா வழக்கை அரசு வாபஸ்பெற்ற செய்தியும் கிடைத்துள்ளது.

இதன்மூலம், 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் பொடா சட்டத்துக்கு எதிராகவும், தன்மீதான வழக்குக்கு எதிராகவும், தமிழக அரசுடன் வைகோ நடத்திவந்த சட்டப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்துள்ளது. நெல்லையில் இருந்து சென்னை வரை 42 நாள்கள் 1025 கி.மீ. தொலைவுக்கு மறுமலர்ச்சி நடைப் பயணத்தை வைகோ மேற்கொண்டுள்ளார். இந்தநிலையில், அரசின் வாபஸ் முடிவு நடைப் பயணத்தைத் தொடர அவருக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஒ)

# பொடா சட்டத்தை நீக்குவதற்கு இந்திய அமைச்சரவை முடிவு

புதுடில்லி,ஓக.12

இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட 'பொடா' சட்டத்தை ரத்துச் செய்ய இந்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் முடிவெடுத்தது.

இச்சட்டத்தை ரத்துச் செய்வதற்கான மசோதா, அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படுகிறது.

அதே நேரத்தில், 'பொடா' சட்டத்துக்குப் பதிலாகச் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை வலுப்படுத்தும் வகையில் பெரிய அளவில் திருத்தங்களைச் செய்யவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பின் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி செய்தியாளர்களிடம் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை வெளியிட்டார். முதலாவதாக, 'பொடா' சட்டத்தை ரத்துச்செய்வது. அடுத்து, 1967ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் சட்டத்துக்கு வலுவூட்டும் வகையில் பெரும் திருத்தங்களைச் செய்வது என்று கூறினார்.

நாடாளுமன்றத்தில் இதுதொடர்பான மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டவுடன் இச்சட்டம் அதிகாரபூர்வமாக ரத்துச் செய்யப்படும்.

கடந்த 2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அவசரச் சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட 'பொடா' பின்னர் 2002 மார்ச் 28ஆம் திகதி சட்டமாக்கப்பட்டது.

(ஒ)



சட்டத்தரணிகள் சங்கத்தில் ஏற்பட்ட பிளவு காரணமாகச் சென்னை நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் மோதலில் ஈடுபட்டனர். அப்போது சட்டத்தரணி ஒருவரைப் பொலீஸார் பிடிக்க முயற்சிக்கின்றனர். அவரோ பொலீஸாருடன் மோதத் தயாராகின்றார்.

# இலங்கைக் கடற்படை சுட்டதில் இராமேஸ்வரம் மீனவர் பலி!

இராமேஸ்வரம் இலங்கைக் கடற் பகுதிக்குள மீன்பிடித்தவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் இராமேஸ்வரம் மீனவர் ஒருவர் பலியானார்.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த திங்கட்கிழமை நூற்றுக்கணக்கான படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். இதில் பாம்பன் பிரான்சிஸ் நகரைச் சேர்ந்த சூசைராஜ் என்பவருக்குச் சொந்தமான படகில் மீனவர்கள் தனிசிங், தில்லைமுத்து, சேவியர் மற்றும் ராமு ஆகியோர் சென்றனர். அன்று இரவு 8 மணியளவில் கச்சதீவிற்கும் இலங்கை தலைமன்னாருக்கும் இடையிலுள்ள பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது, ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் வானத்தை நோக்கிச் சுட்டு இலங்கைக் கடற்பகுதிக்குள் மீன்பிடிக்கும் மீனவர்களை எச்சரித்துள்ளனர். இதனால் அப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த படகுகள் ஒன்றன்பின் ஒன்றாக இராமேஸ்வரத்தை நோக்கித் திரும்பின.

கடற்படையினர் சுட்டதில் மீனவர் ராமுவின் மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. சம்பவ இடத்திலேயே ராமு இறந்துவிட்டார். இதனைத் தொடர்ந்து மீனவர்கள் இரவு ஒரு மணியளவில் இராமேஸ்வரம் துறைமுகத்திற்த வந்து சேர்ந்தனர்.

பலியான மீனவர் ராமுவிற்கு முத்துலெட்சுமி என்ற மனைவியும் ஒரு ஆண் மற்றும் 3 பெண் குழந்தைகளும் உள்ளனர்.

# சதாம் சார்பில் ஆஜராகும் இந்தியச் சட்டத்தரணிகள்

கடந்த 30 ஆண்டுகளில் ஈராக்கில் பல்வேறு குற்றங்கள், படுகொலைகளில் ஈடுபட்டார் என்று சதாம் ஹுசைன் மீது அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது. சதாம் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கவும் வாய்ப்பு உள்ளது.

சதாம் மீதான வழக்கு விசாரணையில் தலையிட சர்வதேச மனித உரிமை அமைப்பு முடிவு செய்துள்ளது. சதாமுக்கு ஆதரவாக வாதாடச் சட்டத்தரணிகள் குழுவைச் சர்வதேச மனித உரிமை அமைப்பு நியமித்து உள்ளது.

இந்தக் குழுவில் சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி பி.வி.பக்தவச்சலமும் இடம்பெற்றுள்ளார். பிரான்ஸில் நடந்த மனித உரிமைகள மாநாட்டில் பக்தவச்சலத்தின் மகள் சட்டத்தரணி அஜிதா கலந்துகொண்டார்.

அப்போது சதாமுக்காக வாதாடும் சட்டத்தரணிகள் குழுவில் இடம்பெறத் தனது சம்மதத்தை அஜிதா மூலமாகப் பக்தவச்சலம் தெரிவித்தார். மேலும் கொல்கத்தாவைச் சேர்ந்த சட்டத்தரணி நிரஞ்சனும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார்.

இது குறித்துப் பக்தவச்சலம் கூறுகையில், 'அமெரிக்காவின் அட்டூழியங்களை அம்பலப்படுத்துவேன். ஈராக்கிலும், ஈரானிலும் குர்து இன மக்களின் போராட்டத்தை ஒடுக்க அமெரிக்காதான் அப்பகுதியில் பேரழிவு ஆயுதங்களை விநியோகித்தது' என்றார்.

(ஒ)




# தி.மு.க. முன்னாள் அமைச்சரின் சொத்துக்களை முடக்க உத்தரவு

ஈரோடு,ஓக.12

வருமானத்திற்கும் அதிகமான சொத்துச் சேர்த்தார் என்று தி.மு.க. முன்னாள் அமைச்சர் என்.கே.கே.பெரியசாமி மற்றும் அவரது இரு மகன்கள், மருமகள் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கில் அவர்களுடைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை முடக்க ஈரோடு மாவட்ட முதன்மை குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சியில் கைத்தறித்துறை அமைச்சராக இருந்தார் பெரியசாமி. அந்தக்காலத்தில் வருமானத்திற்கும் அதிகமாகச் சொத்துக்களைக் குவித்தனர் என்று பெரியசாமி, அவரது மகன்கள், மருமகள் பரிமளாதேவி ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்புப் பொலீஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கிலிருந்து மருமகளை விடுவிக்குமாறு பெரியசாமி தாக்கல் செய்த மனுவை மாவட்ட முதன்மைக் குற்றவியல் நீதிமன்றம் கடந்த வாரம் தள்ளுபடி செய்தது.

இந்நிலையில் பெரியசாமி மற்றும் அவரது குடும்பத்தினரின் அசையாச் சொத்துக்களான வீடு, நிலம் அசையும் சொத்தான கார் மற்றும் இரு உரிமம் பெற்ற துப்பாக்கிகளை முடக்கி வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இந்தச் சொத்துக்களின் இப்போதைய மதிப்பு ஒன்றரைக் கோடி இலங்கை ரூபாவாகும்.

(8)

# மாணவியைக் கொன்றவருக்கு பிறந்த தினத்தன்று தூக்கு

கொல்கத்தா,ஓக.12

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் பவானி போரே பகுதியிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பைச் சேர்ந்த ஹீத்தல் பரேக் (வயது 14) என்ற மாணவி, கடந்த 1989 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 5ஆம் திகதி கொல்லப்பட்டார்.

இதுதொடர்பாக அடுக்குமாடிக் குடியிருப்பின் காவலாளி தனஞ்செய் சட்டர்ஜி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் கொல்கத்தா நீதிமன்றம் அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியது. இதனைத் தொடர்ந்து சட்டர்ஜியின் கருணைமனுவும் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது.

தனஞ்செய்க்கு வருகிற 14ஆம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

அலிப்பூர் மத்திய சிறையில் பலத்த பாதுகாப்புடன் இருக்கும் தனஞ்செய்க்குத் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும் 14ஆம் திகதி அவரின் பிறந்தநாள் ஆகும். அன்று காலை 4.30 மணிக்கு அலிப்பூர் சிறையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்.

இந்தியாவில் 11ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதுதான் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது. இதற்கிடையில் தூக்குத் தண்டனையை நிறுத்திவைக்க அரசியல் சாசனத்தில் 32ஆவது பிரிவின்கீழ் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவுள்ளார் என்று தனஞ்செய்யின் சட்டத்தரணி தெரிவித்து உள்ளார்.

(ஒ)

# கூட்டணி ஆட்சி அமைக்கும் நோக்கம் இல்லை என்கிறது தமிழக காங்கிரஸ்

சென்னை,ஓக.12

தமிழகத்தில் கூட்டணி ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் காங்கிரஸ் செயற்படவில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குப் பொறுப்பானவரும் அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலருமான சல்மான் குர்ஷீத் கூறினார்.

சென்னை, சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் கட்சித் தொண்டர்கள் மற்றும் தலைவர்களைச் சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

'கூட்டணி ஆட்சி என்பது காங்கிரஸைப் பொறுத்தவரை புதிய அனுபவம். கூட்டணி ஆட்சிக்கு நாங்களே முன்னர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளோம். ஆனால், அனுபவங்கள் மூலமாகச் சிலவற்றைக் கற்றுள்ளோம்.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சியினரையும் அரவணைத்து ஆட்சி நடத்தவே காங்கிரஸ் விரும்புகிறது. கூட்டணியிலிருந்து எந்தக் கட்சியும் விலகிச்செல்லாத வகையில் காங்கிரஸ் கட்சி பார்த்துக்கொள்ளும் என்றார் அவர்.

தமிழகத்தில் அதி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட்டு தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அரசை அமைக்க காங்கிரஸ் கட்சி திட்டமிட்டு வருவதாகச் செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## பெங்களூரிலுள்ள பல்கலைக்கழகத்தில் படியுங்கள்

# பிருந்தாவன் கல்லூரி

(முன்னர் தேசிய முதற்றரக் கல்லூரி)
(அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)
2nd Cross Bhoopasandra RMV Extm 2nd Stage Bangalore 94 India

E-Mail intel@brindavan College.Com, WWW brindavan College. Com,
Tel. 018023414557, 23417833. Fax: 23615621, 23417832.

கருத்தரங்கும் உடன் அனுமதியும்
**ஒகஸ்ட் 15ஆம் திகதி - கொழும்பு ஹில்ரனில்**
(அதிபர்/நிர்வாக அறங்காவலர்)
இந்த வருடமே சேர்ந்து ஒரு வருடத்தை மீதப்படுத்துங்கள்.

* B.Sc.நுண்ணுயிரியல்
* உயிர் தொழில்நுட்பவியல்
* மரபணுவியல்
* கணனி விஞ்ஞானம்
* B.C.A.
* B.COM.
* B.B.M.
* M.Sc. உயிர் தொழில் நுட்பவியல்
* நுண் உயிரியல்
* மரபணுவியல்
* M.C.A.
* M.B.A.

ஒகஸ்ட் 12ஆம், 13ஆம் திகதிகளில் மாலை 6.30 மணிக்கு தொலைக்காட்சி 'அலைவரிசை ஐ' நிகழ்ச்சியில் காணலாம்.

**Company Secretarial Services (Pvt)Ltd**
#285C,1/1, Stanley Tilakaratne MWJubilee Post Nugegoda
Tel. 011 - 2854438/0777-387273
E-Mail yapadd @ Sd.lk.

Further details.
Mr.Gunawardana 011 2811524
Mr.Gunasekara 038 2232657
038 "2234154.

(C/36563)(42-14-17-26)


# திருவடிநிலையில் தீர்த்தமாட அனுமதிக்குமாறு கடற்படை அதிகாரிகளிடம் வேண்டுகோள்

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆடி அமாவாசை விரதத்தையொட்டி சுழிபுரம் பிரதேச மக்கள் எவ்வித இடையூறுமின்றிச் சுழிபுரம் திருவடிநிலை கடற்கரைக்குச்சென்று தீர்த்த மாடுவதற்கு அனுமதி வழங்குமாறு பொன்னாலை கடற்படை அதிகாரியிடம்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பறாளை ஆலய நிர்வாகத்தினராலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் தொன்றுதொட்டு ஆடி அமாவாசை தினத்தன்று இக்கடலில் தீர்த்த மாடியே தமது பிதிர்க்கடனைத் தீர்ப்பது வழக்கம் என்ற விடயம் கடற்கரை அதிகாரிக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (10-28-201)

### மீளாய்வுப் பணிகள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறுவோர் தொடர்பான மீளாய்வுப் பணிகள் அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்களில் நடைபெற்று வருகின்றன. சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், கிராமிய புனர்வாழ்வுக் குழுத் தலைவர், கிராம அலுவலர் ஆகியோர் மீளாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.(10-117)

உ
ஓம் குருநாதா துணை

## கஜமுகன் கல்வி நிறுவனம் - வரணி
## சிவசக்தி உயர் கல்வி நிறுவனம் - கொடிகாமம்

எமது கல்வி நிறுவனங்களில் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவில் கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

01) 
02) 

| | | | |
|---|---|---|---|
| குலசபாநாதன் சபேசன் | - 3A | யோகநாதன் ஜெனிதா | - 3A |
| 03) த.அஜந்தன் | - 2AC | 14) மா.மதியழகன் | - 3B |
| 04) ச.முகுந்தன் | - 2AS | 15) க.நிலானி | - ABC |
| 05) வெ.யுகசீலன் | - 2AS | 16) ப.புஸ்பரஞ்சினி | - ABC |
| 06) சி.வசீகரநாதன் | - 2AC | 17) மு.சர்மிளா | - ABC |
| 07) க.கைலவாசன் | - ABC | 18) கா.பிரியங்கா | - A2C |
| 08) து.சோதிநாதன் | - ABC | 19) ந.திருவாணி | - A2C |
| 09) சி.செல்வரூபன் | - ABC | 20) க. சோபிகா | - 2BC |
| 10) க.இராசகுமார் | - 2BC | 21) சி.நிதுசா | - ABC |
| 11) ச.ஜெகராசா | - 2BC | 22) உ.புவிதா | - ABC |
| 12) ப.மதிபன் | - A2C | 23) தி.திருச்செல்வி | - ACS |
| 13) கா.செந்தூர்ச்செல்வன் | - ABS | 24) செ.யமுனா | - 2BC |

அனைவருக்கும் எமது அன்பு கலந்த வாழ்த்துக்கள்!
- நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
(35152) (26-14-17)

# நீங்காத நினைவுகளின் அஞ்சலி

38 ஆம் ஆண்டில் 30 ஆம் ஆண்டில்



அமரர்
**சந்தியோ அந்தோனிப்பிள்ளை**
26-12-1908
15-12-1966



திருமதி
**அன்னம்மா அந்தோனிப்பிள்ளை**
01-04-1914
12-08-1974

அன்னையின் மடியில்
ஆண்டவனின் அவனியில்

"சீவியத்தில் நேசித்த உங்கள் இருவரையும்
மரணத்திலும் மறவோம்"

தந்தையாய் தாயாகி எம்மைக் காத்தீர்
தரணியில் உங்களைப் போல் தெய்வமுண்டோ?
எம்மை வையத்துள் வாழ்வாங்கு வாழ
வைத்த அன்புத் தெய்வங்களே!
ஆண்டுகள் பல ஆயிடினும்
ஆறிடுமோ எம்துயரம்?
எம் இதயத்தில் உங்கள் நாமம் என்றும்...

*42/5, மவுண்கார்மல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(35153)(32-14-17-26)
*அன்புடன் நினைவு கூரும்:*
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய
அதிபரும் பருத்தித்துறை கல்விக்கோட்ட
அதிபர் சங்க உறுப்பினருமாகிய
**முருகேசு சிறிஸ்கந்தராசா**

அவர்களின் மறைவுச்செய்தி எமக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் குடும்பத் துயரில் பங்கேற்பதோடு, ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை கல்விக்கோட்ட
அதிபர் சங்கமும்,
(சி-36564) (26-14-17) கோட்டக் கல்வி அலுவலரும்.


# பட்டரிகள்




வானொலி மற்றும் டோர்ச் பட்டரிகள்

மீண்டும் ஈ ார்ச் செய்யக்கூடிய சீல்ட் லீட்-அசிட் பட்டரிகள்

கைக்கடிகாரம்,கெமரா,செவிக்கருவி, கல்குலேட்டர்,விளையாட்டு பொருள் மற்றும் ரிமோட் கொன்ரோல்களுக்கான பட்டரிகள் மற்றும் பட்டன் செல்கள்.

கோர்ட்லஸ் மற்றும் கையடக்க தொலைபேசிகள், லப்டப்ஸ், வீடியோ கெமரா மற்றும் மின் உபகரணங்களுக்கான Ni-cd, Ni-MH & Li-ion பட்டரிகள் மற்றும் பட்டரி பொதிகள்

**மெக்நெட் செல்ஸ் பிரைவட் லிமிட்டெட்.**
பட்டரி துறையில் முன்னோடிகள்

தலைமை காரியாலயம் : #7,மாயா அவென்யூ,கொழும்பு 06 தொலைபேசி : 2591456 பக்ஸ் : 2594755
காட்சியறை லக்கி ப்ளாசா,செண்ட் அந்தனிஸ் மாவத்தை,கொழும்பு 03 தொலைபேசி : 2574675

Tradlanka Advertising


# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
**சின்னையா சண்முகம்**

தோற்றம்: 05-04-1935
மறைவு: 13-07-2004

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 12.08.2004 எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இல.71, றக்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(35145) (26-14-17)
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## செல்லையா இராசரத்தினம் (பத்தர்)



சங்கானை, நாகலிங்க சுவாமிகள் வீதியைப பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசரத்தினம் பத்தர் 08-08-2004 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, அன்னம்மா, நடராசா ஆகியோரின் சகோதரரும் இராஜபாலா (ஜேர்மனி), பாலராணி, பாலரோகினி, பாலகிரிஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தினி (ஜேர்மனி), சந்திரமோகன், விமலானந்தன், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுசியா, தினேஸ், விக்னேஸ் (ஜேர்மனி), கிஷாந், தர்ஷிகா, சாருகன், லிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராமச்சந்திரனின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.08.2004) வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"இராஜபவனம்",
நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை. (35160) (26)

தகவல்:
இ.இராஜபாலா
*(மகன்).*

# கொலைப் பயமுறுத்தல் வந்தபோதும் உரிமைக் குரலை அடக்கி வாசிக்காதவர்!

## அமரர் குமார் பொன்னம்பலத்தின் பிறந்ததினம் இன்றாகும்

அ.குமாரவேலு
விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி



அடக்கியொடுக்கப்பட்ட தமிழ்மக்களின் உரிமைகளுக்காகத் தமிழர் ஆயுதம் ஏந்திப் போராடிக்கொண்டிருந்த காலத்தில் அதற்குப் பக்கபலமாக ஜனநாயக வழிமுறைகளில் தனியொரு மனிதனாகத் தலைநகரில் நின்று குரலெழுப்பி மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் ஜனனதினம் இன்றாகும். மிகுந்த கௌரவமும் உயர்ந்த வரலாறும் சீரும் சிறப்பும் செல்வமும் மிகுந்த ஒரு குடும்பத்தில் இம்மாமனிதர் உதித்தார். இலங்கையின் தலைசிறந்த சட்டமேதையான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் மகனாக அவதரித்த அவர், கொழும்பு றோயல்கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்துச் சட்டத்துறையில் பாரிஸ்டர் ஆனார். இந்திய, சிங்கப்பூர், நீதிமன்றங்களில் வாதிடும் வழக்கறிஞராகத் தொழில்சார் தகைமைகளைப் பெற்றார். 1977 ஆம் ஆண்டு முதற்றடவையாக அரசியலில் தன்னை இணைத்திருந்தார்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் அனுபவம், பட்டறிவு ஆகியவை எவ்வாறு அவனை யதார்த்த வாழ்க்கையை நோக்கி நகர்த்தும் என்பதற்குக் குமார் பொன்னம்பலம் அவர்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். பேரினச் சமூகம், கொக்கரித்து நின்ற கொழும்பிலேயே அவர் வாழ்ந்தார். அந்தச் சமூகத்தின் உயர்மட்டத்தவரோடும் புத்திஜீவிகளோடும் அவர் நல்ல தொடர்பைக் கொண்டிருந்தார். - தமிழர் சமூகத்தின் அரசியல் பிரச்சினை பற்றி அந்தப் பேரின சமூகத்துடன் அவர் கலந்து பேசியிருந்தார். ஜனநாயக ரீதியான அகிம்சை வழிகளிலான போராட்டங்கள் ஊடாகவும், பேச்சுகள் மூலமாகவும் தமிழர் தம் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமென ஆரம்பத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த ரீதியாக அரசியல் வழிமுறைகளில் அவர் செயலாற்றி வந்தார். ஆனாலும், பேரினவாத சிங்களத் தலைவர்களின் போக்கு தமிழ்மக்களைக் கருவறுத்து அவர்களின் வாழும் உரிமைகளை ஏறிமிதிக்கும் செயற்பாட்டில் இருந்து விலகப்போவதில்லை என்பதை அந்தச் சிங்களத் தலைவர்களுடன் உரையாடியதன் மூலம் அறிந்து கொண்டார். இந்தப் பட்டறிவு அவரைச் சிங்கத்தின் குகையிலேயே சிங்கத்தைச் சந்திக்கும் தமிழ்ப்புலி என்ற நிலையைத் தோற்றுவித்தது. அந்தக் குகையில் நின்றே உறுமத்தொடங்கினார். அவரது வாழ்க்கையின் இறுதி ஐந்து வருடமும் மிகமுக்கியமான காலகட்டமாகும். 1995 - 2000 ஆம் ஆண்டுக்காலப்பகுதி தமிழ் மக்கள் பட்ட வேதனைகள், சோதனைகள், அவமானங்கள், பெருமூச்சுகள் என்பன எழுத்தில் வடிக்கமுடியாதவை. சமாதானத்தூது என்று வந்த அரசு சமாதானத்துக்கான யுத்தத்தைத் தமிழ்மக்கள் மீது ஏவிவிட்டது. இலங்கையின் அனைத்து வளங்களும் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டன. தமிழினம் பூண்டோடு அழிக்கப்பட்டுவிடுமா என்ற நிலை தோன்றியது. இன அபிமானம் கொண்ட குமார் பொன்னம்பலம் சிங்களத் தலைநகரில் நின்று தனியொரு தமிழ் அரசியல்வாதியாக வீராவேசம் கொண்டார்.

தனது சொத்துச் சுகங்களைத் துறந்தார். தனது ஓய்வினை இழந்தார். தூக்கத்தைக் கலைத்தார். தனது சமூகத்தின் இருப்பை நிலைநிறுத்தத் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார். மற்றைய தமிழ் அரசியல்வாதிகள் கொழும்பிலே வாய் பொத்தி மௌனிகளாக நின்றபோது உரத்துக் குரல் கொடுக்கும் தனியொரு தமிழனானார். கரடிக்கு முன்னால் சிவபூசை செய்வது அர்த்தமற்றது என்பதை உணர்ந்தார். மனித உரிமைகளை மதிக்கத் தெரியாத அரசுக்கு முன்னால் மண்டியிடமுடியாது என்றார். எதிரி எந்த வழியைக் கையாளுகின்றானோ அதே வழியில் அவனைச் சந்ததிப்பதைத் தவிர வேறு மார்க்கம இனி இல்லை என அவர் முற்றாக நம்பினார். தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என முதலில் தெரிவித்த அரசியல்வாதி அவர் ஒருவரேயாவர். 'ராவய' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் என்னால் இப்பொழுது துவக்குத் தூக்க முடியுமாயின் நான் களத்தில் நின்றிருப்பேன என அவர் கூறினார்.

அவரது அரசியல் பட்டறிவே இவ்வாறு கூறுவதற்கு அவரைத் தூண்டியது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற படுபாதகச் சட்டத்தின் மூலமும், அவசரகாலச் சட்டத்தின் மூலமும் தமிழ்மக்களின் குரல்வளை நெரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வகை, தொகை இன்றிக் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளினால் தென்னிலங்கைச் சிறைகள் நிரம்பிவழிந்தன. பல தமிழ் வழக்கறிஞர்கள் இருந்தபோதும் இவர்களுக்காக வாதிடமுன்வரவில்லை. அவர்கள் அனைவருக்குமாகவே -தமிழ் மக்களின் உரிமைகள் ஏறிமிதிக்கப்படுவதை உலகுக்கு உணர்த்தக் குமார் பொன்னம்பலம் பறந்துதிரிந்தார். தனது சொந்தப் பணத்தைச் செலவழித்து ஒவ்வொரு நாடாகச் சென்று ஒவ்வொரு சர்வதேச அமைப்புக்குச் சென்று இதனைத் துலாம்பரப்படுத்திய தனியோர் அரசியல்வாதியாகவிருந்தார்.

அவர் ஒரு மனித உரிமைவாதி. சிலசந்தர்ப்பங்களில் சிங்கள இளைஞர்களுக்காகவும், மனித உரிமைகள் மீறப்பட்டபோது அவர் வாதாடியிருக்கின்றார் என விக்கிரமபாகு கருணாரட்ன பிற்காலத்தில் குறிப்பிட்டிருந்தார். குமார் பொன்னம்பலம் அவர்கள் உலகின் பல இடங்களிலும் பேசிய பேச்சுக்கள், புலம்பெயர்ந்த தமிழ்மக்களிடையே அவர் பேசிய பேச்சுக்கள், தலைநகரில் நின்று அவர் கர்ஜித்த உரைகள், மனம உடைந்திருந்த தமிழர்களின் நாடி, நரம்புகளில் புத்துயிர் அளித்துப் புது இரத்தத்தை ஓடச்செய்தது.

தன்னை அழிப்பதற்குத் தன்னைச் சுற்றி வியூகம் வகுக்கப்படுகின்றது என்பதனைக் குமார் நன்குணர்ந்திருந்தார். இதுபற்றி அவருக்குப் பல எச்சரிக்கைகள் விடப்பட்டன. அந்தச் சந்தர்ப்பத்தில்கூட குமார் அடக்கி வாசிக்கவில்லை. சீறி எழுந்துகொண்டேயிருந்தார். அவர் கடவுள் நம்பிக்கை கொண்டவர். கடவுள் விட்டவழி எதுவோ அது எப்பவாவது நடக்கட்டும். அதுவரை என் இனத்துக்காகக் குரல்கொடுப்பது என் கடமை என அவர் செயற்பட்டுவந்தார். அவர் பல தடவைகள் தேர்தலில் நின்றார். ஒவ்வொரு தடவையும் தோற்றார். தமிழ் மக்கள் தன்னை நிராகரித்து வந்தபோதும் அவர் சளைக்கவில்லை; அரசியலைத் துறக்கவும் இல்லை. மக்கள் ஒருகாலத்தில் என்னை உணர்ந்துகொள்வார்கள். அதுவரை என் தமிழ்த்தேசியக் கடமை தொடரும் எனத் தன் பணி தொடர்ந்தவர் அவர். அவர் நினைத்தது போலவே தமிழ்மக்கள் இதனை உணர்ந்து கொண்டார்கள். பேரினவாதிகள் அவரை அழித்த போது உலகில் வாழ்ந்த அனைத்துத் தமிழ் நெஞ்சங்களும் துக்கத்தால் துவண்டன. தமிழ்த்தேசியத் தலைவர் அவருக்கு மாமனிதர் பட்டத்தை வழங்கியது அவரின் இனம் சார்ந்த பற்றுக்கும் சேவைக்குமாகவே. தமிழ்த்தேசியத் தலைவர்மீது மிகுந்த அபிமானத்தைக் குமார் கொண்டிருந்தார். தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்தியும், பலமும் அவருக்கு மட்டுமே உண்டு என்பதைப் பகிரங்கப்படுத்தக் குமார் பொன்னம்பலம் தன்னாலான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டார். இன்று சர்வதேச சமூகம் அதனை ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த அரசுக்கு அழுத்தம்கொடுக்கின்றது. குமார் பொன்னம்பலம் அவர்கள் சத்தியத்தை வெல்ல வைக்கும் பாதையில் சென்றவர்களுக்கு அரசியல் அரணாகத் திகழ்ந்தார். அர்த்தமுள்ள அரசியல் வாழ்வை மேற்கொண்ட அஞ்சாநெஞ்சன். அவரின் குரல்வளை நெரிக்கப்பட்ட பின்பும அவரது குரல் ஒலி ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கின்றது. குமார் பொன்னம்பலத்தின் உடல் அழிந்துவிட்டாலும் அவரின் உயிர் எங்களுடன் வாழ்ந்துகொண்டே இருக்கின்றது. ▲

# கைப்பணிப் பொருள் கண்காட்சி செப்ரெம்பரில் திருகோணமலையில்

யாழ்ப்பாணம்,ஓக.12

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாணமட்ட கைப்பணிப் பொருள் கண்காடசி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம திகதி முதல் மூன்று தினங்கள் மட்டக்களப்பு சென். மைக்கேல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சியில் மட்பாண்டப் பொருள்கள, கைத்தறிப் பொருள்கள், மட்பாண்ட மைதீட்டல பொருள்கள், பிரம்பு உற்பத்திப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள், விவசாயக் கழிவுகள் மற்றும் உள்ளூர்க் கழிவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்திசெய்யப்படும் பொருள்கள், சிற்பவேலைப்பாடுடைய பொருள்கள்.

தும்பு உற்பத்திப் பொருள்கள், ஓவியங்கள், பனம் மூலப்பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், மர வேலைப்பாடுகள் உட்பட 28 வகைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எட்டுமாவட்டங்களின் உற்பத்திப் பொருள்களும் காட்சிப்படுத்தப்படும். இக்கண்காட்சியில் முதல்மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தமது பொருள்களை காட்சிப்படுத்த விரும்பும் யாழ். மாவட்ட கைப்பணியாளர்கள் தமது பொருள்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டத் தொழிற்றுறைத் திணைக்களத்திடமோ அல்லது நெசவுப் பயிற்சி நிலையங்களிலோ ஒப்படைக்குமாறு மாவட்ட தொழிற்றுறைத் திணைக்கள அலுவலர் பி.இராகவன் கேட்டுள்ளார். (ஐ-5)

# வெளிவாரிப் பரீட்சைப் பெறுபேறுகள் காலக்கிரமத்தில் வெளிவருவது எப்போது?

தெல்லியூரான்

**யாழ்.** குடாநாட்டில் மாணவர்களுக்குக் கல்வி போதிக்கும் அமைப்புக்களில் தலையாயதாகத் திகழ்வது யாழ். பல்கலைக்கழகம். இந்த அமைப்பு உள்வாரி, வெளிவாரி என இரு பிரிவுகளாகப் பரீட்சைகளை நடத்திப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது.

தரப்படுத்தல்முறை அறிமுகப்படுத்தப்பட்டதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவே ஒரு நிவாரணமாக இருந்து வருகின்றது.

இவற்றுள் வெளிவாரிக் கல்வி கற்கின்ற மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே தமது கல்வியினை மேற்




கொள்கிறார்கள். ஆனால், வெளிவாரி மாணவர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு பல்கலைக்கழக நிர்வாகம் செயற்படுவதில்லை என்பது அம்மாணவர்களின் ஆதங்கம்.

மாணவர்களுக்குரிய வெளிவாரிப் பரீட்சைகள் உரிய காலத்தில் இடம்பெறுவதில்லை. 2002ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற வேண்டிய கலைமுதற்தேர்வு (G.A.Q.) பரீட்சை 2003ஆம் ஆண்டு மே மாதமே இடம்பெற்றது. தற்போது இடம்பெற்ற கலைமாணி பகுதி I (B.A. Part I) பரீட்சை 2002 ஆம ஆண்டு இடம்பெறவேண்டியது. இப்பரீட்சை 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதப் பிற்பகுதியிலும் ஓகஸ்ட் மாத முற்பகுதியிலும் தற்போதே இடம்பெற்றது. 2003இல் கலைமுதற்தேர்வுப் பரீட்சை இடம்பெற்ற போதும் ஒருவருடத்துக்கு மேலாகியும் தற்போது வரை பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. இப்பெறுபேறுகள் எப்போது வெளிவரும் என்பதும் திட்டவட்டமாகத் தெரியாது.

கடந்த கலைமாணி பகுதி I பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட விசாரணைக்குழு, பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவிடுவதில் ஏற்படுகின்ற தாமதமும் மோசடிகள் இடம்பெறக் காரணமாகலாம் என்று தெரிவித்திருந்தமை இங்கு கவனிக்கப்படவேண்டியது.

தற்போது நடைபெற்று முடிந்த கலைமாணி பகுதி I பரீட்சைக்காகப் பல மாணவர்கள் புதிய பாடங்களைத் தெரிவுசெய்து - சுமார் இரு வருடங்களுக்கு முன்னதாகவே - விண்ணப்பித்திருந்தனர். அதற்கேற்றவாறு தம்மைத் தயார்ப்படுத்தியும் இருந்தனர். ஆனால், ஒருவாரத்துக்கு முன்னர் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையின்படி அவ்வாறு அவர்கள் விண்ணப்பித்ததுபோலன்றிக் கலைமுதற் தேர்வில் தோற்றிய பாடங்களுக்கே பரீட்சை எழுத வேண்டும என நிர்ப்பந்திக்கப்பட்டனர். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது புதிய பாடத் தெரிவை ஏற்றுக்கொண்ட நிர்வாகம், பாட்சை அனுமதி அட்டை வழங்கும்போது மறுத்தமையானது நிர்வாகத்தின் திறமையின்மையையும் மாணவர்கள் மீதான கரிசனையின்மையையுமே காட்டுகின்றது.

பரீட்சை நடைபெறப்போகின்றது என்று எதிர்பார்த்துப் படித்துச் சோர்ந்த மாணவர்களுக்கு இரண்டுவார முன்னறிவித்தலுடன் திடுதிப்பெனப் பரீட்சை நடத்திமுடிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சையின் சில பாடங்கள் சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் காலை, மாலை என்றவாறு தொடர்ச்சியாக இடம்பெற்றன.

பரீட்சை இடம்பெற்ற சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் உள்வாரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதனால், அருகிலிருந்த மண்டபப் பரீட்சார்த்திகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு பௌர்ணமித் தினமாகிய அன்றும் பரீட்சைகளை ஒழுங்கு செய்தமை வெளிவாரி நிர்வாகத்தின் தவறே.

மாணவர்களுக்கு வழங்கப்படும் பதிவுப் புத்தகம் ஐந்து வருடங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஆனால், காலத்தை இழுத்தடித்துச் செல்லும் நிர்வாகத்தின் போக்கிற்கு 750-ரூபா செலுத்தி பதிவைப் புதுப்பிக்கவேண்டியநிலை மாணவர்களுக்கு.

பட்டம் பெற்ற எத்தனையோ மாணவர்கள் வேலைக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இங்கு பட்டத்திற்காகவே காத்துக்கொண்டிருக்கவேண்டிய துன்பகரமான நிலைமையே காணப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு தற்போது புதிய நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

எதிர்காலத்தில் உரிய தருணத்தில் பரீட்சைகள் இடம்பெறுவதும் பெறுபேறுகள் வெளியாவதும் உறுதிசெய்யப்படவேண்டும்.

புதிய நிர்வாகமாவது வெளிவாரிப் பிரிவு மாணவர்களின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ❖

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 - 10 - 1994 | 12 - 08 - 2001 |

## புஸ்பராசா தனோஜன்

அப்பா அம்மா என அழைக்க
மகன் இன்றித் தவிக்கிறோமே!
மழலை மொழி மாறாத
பச்சைப் பாலகனே!
எமை விட்டு எங்கு சென்றாய்!
அக்கா அழைக்கிறாளே உனை
கூப்பிட்ட குரலுக்கு பதில் சொல்லாது
நீண்ட தூரம் சென்றாலும் மாறாய் எமை விட்டு!

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்கா.

சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி.

(35052)(34-19-15-24)


## பளை வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லை

பளை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லாமையாலும், அம்புலன்ஸ் வண்டிக்கான நிரந்தர சாரதி இன்மையாலும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து வரும் வைத்தியர் காலையில் வந்து மாலையில் திரும்பிவிடுவதால், வைத்தியர் வந்து செல்லும் நேரம் தவிர்ந்த மற்றைய நேரத்தில் நோயாளர்கள் பெரும் சிரமமடைந்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டிக்குரிய நிரந்தர சாரதி இல்லாமையால் அவசரமான நிலைகளில் நோயாளர்களை வேறு வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லமுடியாதுள்ளது. (8-352-201)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

வடமராட்சி,ஓக.12

மருதங்கேணி, வத்திராயன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வத்திராயன் வடக்கு சன சமூக நிலையத்தில் கிராம அலுவலர் ந.பால சுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது (10-173)


## "ஏற்கின்ஸ் பென்ஸ் ஓவசீஸ் ரவல்"




★ உள்நாட்டு வெளிநாட்டு
விமானப் பயணச்சீட்டுக்கள் குறைந்த செலவில் (ஸ்ரீலங்கன், சிங்கப்பூர், இந்தியன், எமிரேற்ஸ் எயர்லைன்ஸ், கட்டார், எயர்வேஸ் போன்ற சகல விமானச்சீட்டுக்களும் பெறலாம்)
★ திகதி மாற்றம், விமானச்சீட்டு உறுதிப்படுத்துதல்
★ பாஸ்போட்/Hotel Booking போன்ற சேவைகளுடன்,
★ சர்வதேச விமானப் பயணம் சம்பந்தமான சகல ஆலோசனைகளும் (வீசா உட்பட) வழங்கப்படும்.

விவரங்களுக்கு : 56/15 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(யாழ்.பெரிய தபால் கந்தோர்) T.P.: 021-222-3771

(C/36355)


## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

கீழே குறிப்பிட்டுள்ள பெயருடையவர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

அலுவலக நேரம்:
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8 மணி தொடக்கம் 5 மணி வரை
(விடுமுறை நாள்கள் தவிர)

| | |
|---|---|
| 44. விக்கிரமாதித்தன் செல்வராணி | 240, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் |
| 45. கொலின்ஸ் கீதா | 17/7, கடற்கரை வீதி, குருநகர் |
| 46. குருசாமி சிவானந்தன் | 72, நாவலர் வீதி, நாவாந்துறை |
| 47. முத்துராசா மேரி கில்டா | 559/51, வசந்தபுரம், 2ஆம் குறுக்கு, கொழும்புத்துறை |
| 48. சின்னப்பு லோறன்ஸ் | 63, புதிய கடற்கரை வீதி, குருநகர் |
| 49. அன்டன் கொன்ஸ்டன்டைன் டொரத்தி | 8, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் |
| 50. விஜயராசா பரமேஸ்வரி | 7/8, பிறவுண் வீதி, 3ஆம் ஒழுங்கை,யாழ்ப்பாணம் |
| 51. நாகராசா ஞானமலர் | 498, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் |
| 52. தியாகராசா ஜெகதாம்பாள் | 210, 6ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம் |
| 53. சந்திரதாஸ் சிவராணி | 149, 5ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம் |
| 54. மரியதம்பி | பரிசுத்த சிலுவை சுகாதார நிலையம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் |
| 55. அன்டனி கிறிஸ்டி பிறேமாவதி | 21, நாவலர் வீதி, நாவாந்துறை |
| 56. சவரிமுத்து மேரி கிலேஸ்வரி | 21, நாவலர் வீதி, நாவாந்துறை |
| 57. பூராணநாதன் ஆயித்தபிள்ளை | 141, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 58. விஜயராசா செல்வா | 221, 7ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம் |
| 59. கிருஸ்ணராசா ரேவதி | 223, 6ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம் |
| 60. பிரான்சிஸ் ஜானகி | 15, மத்திய கிழக்கு வீதி, குருநகர் |
| 61. செல்லையா பிரான்சிஸ் | 219, 6ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம் |
| 62. மலர் பௌலீஸ் | 99/1, டேவிட் வீதி, குருநகர் |
| 63. பாவிலு சார்ள்ஸ் | 52, கடற்கரை வீதி, குருநகர் |
| 64. யூட் மரியா பிறீடா | கற்குளம் வீதி, கொட்டடி |
| 65. அருளப்பு மேரி அனிட்டா | 5, புதிய வீடமைப்புத் திட்டம் |
| 66. செபஸ்ரியாம்பிள்ளை றீற்றம்மா | முதலாம் கொட்டடி வீதி, நாவாந்துறை |
| 67. சேவியர் பிரான்ஸிஸ்கா | 112, மணியந்தோட்டம் |
| 68. கந்தையா யோகரத்தினம் | 44A, கடற்கரை வீதி, றெக்கிளமேஷன், குருநகர் |
| 69. விஜயரத்தினம் தனலட்சுமி | 39, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம் |
| 70. சிவராசா நாகேஸ்வரி | 143/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 71. கலாதாஸ் கமலகுமாரி | தண்ணீர் தாங்கி வீதி, குருநகர் |
| 72. மார்க்கண்டு உமாதேவி | ஐந்துசந்தி, தபாற்கந்தோர், வண்ணார்பண்ணை |
| 73. மாரிமுத்தர் ஞானசேகரம் | 9ஆம் குறுக்குத் தெரு, பொம்மை வெளி |
| 74. பாஸ்கரன் மேரி கஜோர் | 71, 5ஆம் குறுக்குத் தெரு, மணிப்புரி, மணியந்தோட்டம் |
| 75. நவரத்தினம் கண்மணி | செல்லக்கிளி அம்மான் இடம்பெயர்ந்தோர் முகாம், அரியாலை |
| 76. சில்வெஸ்ரர் மாரியம்மா | குருசோ வீதி, யாழ்ப்பாணம் |
| 77. சொமெசுதீம் வசந்தலட்சுமி | 20/1, எழிலூர், கொழும்புத்துறை |
| 78. அருள்ானந்தன் லூர்த்தம்மா | 17/6, கடற்கரை வீதி, குருநகர் |
| 79. நாகரத்தினம் கமலாதேவி | 493, கமால் வீதி, யாழ்ப்பாணம் |
| 80. வேலுப்பிள்ளை இராஜேஸ்வரி | 78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| 81. கணேசன் புனிதவதி | 34, 2ஆம் குறுக்குத் தெரு, மணிப்புரி, கொழும்புத்துறை |
| 82. கஸ்பார் வில்பேட் | 19/4, பூங்கா வீதி, குருநகர் |
| 83. பரமநாதர் குணசேகரம் | 85, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் |
| 84. அருணாசலம் இலங்கரத்தினம் | போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் |
| 85. பேர்னாட் றீகன் | சூசையப்பர் கோயிலடி, அச்சுவேலி |
| 86. மணிமாறன் ரதிதேவி | மே/பா. முத்துலிங்கம், நீர்வேலிச் சந்தி |
| 87. செல்லன் யோகேஸ்வரன் | மாதாகோயில் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு |
| 88. அக்னஸ் மரிய ஜோர்ஜ் குணராஜா | 132, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் |
| 89. ச.தவராசா | சல்லை, வளளாய், அச்சுவேலி |
| 90. க.ரகுபதி | அம்மன் கோயில், ஊரெழு |
| 91. சதாசிவம் அங்கயற்கண்ணி | கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு |
| 92. கிட்ணன் விமலராசா | வளளாய் மேற்கு, அச்சுவேலி |
| 93. முத்துத்தம்பி சோதிப்பிள்ளை | மே/பா. வேலுப்பிள்ளை, சிறுப்பிட்டி மத்தி |
| 94. சுப்பையா கனகரத்தினம் | ஆவரங்கால், புத்தூர் |

குறிப்பு:-
மேலும் பெயர் விவரங்கள் 13.08.2004, 14.08.2004 ஆகிய திகதிகளில் 'உதயன்' பத்திரிகையில் வெளிவரும்.

(சி-36539) (24-19-15)

## பணிநிலை வேண்டுகை

ஆயப்புகுதியின் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

☆ பணிநிலை: கணனித்தரவு பதியுநர்

☆ தகைமை:

01. எம்.எஸ்.ஒபீஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.
02. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

☆ சம்பள அளவுத்திட்டம்: $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$

தகுதியுடையவர்கள் 2004-08-20 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் சான்றிதழ்களுடன் வருகைதரவும்.

1. தன்வரலாற்றுச் சான்றிதழ்
2. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
3. ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

மனிதவள மேலாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை.

(சி-36543) (26-19-15-24)


## London English College

No. 105, Arasady Road, Jaffna.
T.P. : 021-222-5889, 0777-252180

- British கற்பித்தல் முறையிலான ஆங்கிலக் கல்வி
- நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்கள்
- செயல்முறை வகுப்பிற்கு கூடிய முக்கியத்துவம்
- தேவைக்கேற்ப அடிப்படைக் கணனி வசதிகள்
- பல ஆசிரியர்கள் கொண்ட வேறுபட்ட வடிவத்திலான கற்பித்தல்

A/L 2003 / 2004
சித்தியடைந்த மாணவர்களுக்கான விசேட ஆங்கிலக் கற்கைநெறி

பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள்
தொழில் வாய்ப்பினை எதிர்பார்க்கும் மாணவர்கள்
வெளிநாட்டு பட்டப்படிப்பை எதிர்நோக்கும் மாணவர்கள்
அனைவருக்கும்

London English College
No. 105, Arasady Road, Jaffna.
T.P. : 021-222-5889, 0777-252180

★ காலம் 03 மாதம்
★ வாரத்தில் 03 நாள்கள்
★ தினமும் 02 மணித்தியாலங்கள்
★ மாதக் கட்டணம் 1,500/- (தவணை முறையில்)

- Listening (Video & Audio)
- Speeh and Reading
- Language Structures
- Discussion and Writing
- Computer Studies

வகுப்பறைகளில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவார்கள்.
பாடப்பிரதிகள் அனைத்தும் இலவசம்
உங்கள் வசதிக்கேற்ப நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம்.

(சி-36516)(24)

London English College
No. 105, Arasady Road, Jaffna.
T.P. : 021-222-5889, 0777-252180

# அடிக்கடி இடம்மாறி இயங்க நேர்ந்தபோதும் வாழ்வாதாரமாக மிளிர்கின்றது 'வாழ்வகம்'

'கண்ணிழந்தார் வாழ்விழந்தார்' என்ற கருத்தை பொய்யாக்கும் விதத்தில் வலுவிழந்தோரை கல்வியிலும், சுய ஆற்றலிலும் மேன்மை பெறச் செய்து தன்னம்பிக்கையுடன் வாழ உதவி செய்து வருகின்றது 'வாழ்வகம்'.

1988 ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வாழ்வகம் போர்ச் சூழலில் பல இன்னல்களைச் சந்தித்தும் தன் சேவையில் தளராது இன்றும் உறுதியுடன் மருதனார்மடம் றொட்டியாலடியில் இயங்கி வருகின்றது.

பலரின் நன்கொடைகள் மூலமும் உதவி மூலமும் இந்த இல்லத்தை தொடக்கி இன்று வரை வழிநடத்திச் செல்பவர் செல்வி அன்னலக்ஸ்மி சின்னத்தம்பி.

67 வயது நிரம்பிய இவர் இன்றும் இந்த இல்ல்த்தை மிகத் திறமையாக நிர்வகித்து வருகின்றார்.

கடந்த காலங்களில் இந்த இல்லம் தாண்டி வந்த பிரச்சினைகளையும் படைத்த சாதனைகளையும் இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

இந்த இல்லத்தின் ஸ்தாபகர் செல்வி அன்னலக்ஸ்மி சின்னத்தம்பி 1971 ஆம் ஆண்டில் மகரகமவில் கண்பார்வையற்றவர்களுக்குக் கற்பிக்கும் முறை தொடர்பாகப் பயிற்சிநெறி ஒன்றைப் பூர்த்தி செய்திருந்தார்.

ஆசிரியராகக் கடமையாற்றிய இவரை இந்தப் பயிற்சி ஒரு சேவகியாக மாற்றியமைத்தது. 1972 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் பலவற்றில் இவர் கற்பித்தலை மேற்கொண்டார்.

குறிப்பாக யூனியன் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, இந்துக் கல்லூரி, பாசையூர் சென் அன்ரனிஸ் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ், ஹாட்லிக் கல்லூரி போன்றவற்றில் பார்வையற்றவர்களுக்கான விசேட வகுப்புகள் நடத்தப்பட்டன. மாணவர்கள் தங்கள் வீடுகளிலிருந்தே பாடசாலைக்கு வந்தார்கள்.

**தொகுப்பு: தீபா, கங்கா**

ஆயினும் சில பெற்றோர் மட்டுமே இதற்கு ஒத்துழைப்பு வழங்கினர். பல பெற்றோர்கள் பார்வையற்ற பிள்ளைகளின் திறமைகளை 'உனக்குக் கண் தெரியாது நீ ஒன்றும் செய்ய மாட்டாய்' என்று தாங்களே மழுங்கடித்தார்கள்.

எனவே, இந்தப் பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர வேண்டும், வளர்க்க வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

### வாழ்வளிக்கும் வாழ்வகம்

1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி தெல்லிப்பழையில் 12 பிள்ளைகளுடன் வாழ்வகம் தொடங்கப்பட்டது. ஒரு வீடு வாடகைக்கு எடுத்தே இந்த இல்லம் நடத்தப்பட்டது.

தொண்டு நிறுவனங்கள், சமூக சேவையாளர்களின் உதவியுடன் குறிப்பாக மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் இந்த இல்லம் இயங்கி வந்தது.






### வாழ்வகத்தின் இன்னல்கள்

1990 ஆம் ஆண்டு தெல்லிப்பழையிலிருந்து இடம்பெயர்ந்து உடுவிலில் 26 பிள்ளைகளுடன் இயங்கி வந்தது. 1995 ஆம் ஆண்டு முன்னேறிப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையால் மீண்டும் இடம்பெயர நேர்ந்தது. இந்த இடப்பெயர்வின் மூலம் வாழ்வகத்தின் ஆவணங்கள், தளபாடங்கள் அனைத்தையும் இழக்க நேரிட்டது.





மீண்டும் பிள்ளைகளை வீடுகளில் சென்று சந்தித்து 1998 இல் மானிப்பாயில் வாழ்வகம் ஆரம்பிக்கப்பட்டது. மீண்டும் இடம்பெயர்ந்து 4 ஆவதுஇடமாக மருதனார்மடம், றொட்டியாலடியில் வாழ்வகம் தொடங்கப்பட்டது.

### வாழ்வகத்தின் வளர்ச்சியில் பங்காற்றியவர்கள்

இந்த இடத்தில் வாழ்வகத்தை மீண்டும் தளராது நம்பிக்கையுடன் ஆரம்பிக்க உந்துதலாக இருந்தவர்களுள் குறிப்பிடக் கூடியவர்கள் சிலர் உள்ளனர்.

சமூக சேவைகள் மையத்தின் நிர்வாகியாக கடமையாற்றிய கமலா சிவசிதம்பரம் தற்போது வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சில் பணி புரிகின்றார். அவர் செயலகத்துடன் தொடர்பு கொண்டு வாழ்வகத்தை அழிய விடாது காக்க வேண்டினார். அவரின் உந்துதலால் தான் மருதனார்மடத்தில் இந்த வாழ்வகம் ஆரம்பிக்கப்பட்டது.

சமயச் சொற்பொழிவாளர் ஆறு.திருமுகன் லண்டன் சென்றிருந்த போது இந்த இல்லத்திற்காக நிதி திரட்டிக் கொடுத்தார். அந்த நிதி மூலம் 32 பரப்புக் காணி இல்லத்திற்காக வாங்கப்பட்டது. பொன் தெய்வேந்திரம் அவர்களும் இந்த இல்லத்திற்காக நிதிகள் சேகரித்து வழங்கியவர்.

நிதி மூலம் வாங்கப்பட்ட காணியில் 'றான்' நிறுவனம் சிறிய கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொடுத்துள்ளது.

### வாழ்வகத்தின் தேவைகள்

தற்போது இந்த வாழ்வகத்தில் 32 பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி கற்கிறார்கள். இந்தப் பிள்ளைகளுக்கான படுக்கையறைகள் போதியளவு உள்ளன. ஆனால், வாழ்வகத்துக்கான அலுவலக வசதியோ, விருந்தினர் வரவேற்பறை, நூலகம், படிக்கும் அறை போன்ற வசதிகளோ இல்லை.

பெண்கள் தங்கும் அறையில் அலுவலகமும் ஆண்கள் தங்கும் அறையில் வரவேற்பறையும் செயற்படுகின்றன. சமையலறையின் இரு மருங்கிலும்தான் பிள்ளைகளுக்கான கற்பித்தலை மேற்கொள்கின்றனர்.

இந்த இல்லத்துக்கான ஆளணியும் போதியளவாக இல்லை. வேலைக்கென வருபவர்கள் தங்கள் வசதிகளைக் கருத்தில் கொண்டுதான் கடமையாற்றுகின்றார்கள். எனவே, அவர்களால் தொடர்ந்தும் வேலை செய்ய முடியாமல் திரும்பிவிடுகின்றனர் என்று கூறப்படுகின்றது.



### சுகாதாரம் மருத்துவம்

பிள்ளைகள் இல்லத்தில் இணைந்தவுடன் அவர்களுக்கு உளவளத்துணை அளித்து அவர்கள் உள்ளங்களில் முதலில் தன்னம்பிக்கை தோற்றுவிக்கப்படுகின்றது.

நாளாந்த சுகாதாரம் மிகவும் சிறந்த முறையில் பாதுகாக்கப்படுவதுடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் டாக்டர்களும், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் வந்து மருத்துவப் பரிசோதனை மேற்கொள்கின்றார்கள்.

### வாழ்வகத்தின் செல்வங்கள்

இந்த இல்லத்தில் வாழும் பிள்ளைகளுக்கு கல்வியறிவு போதிக்கப்படுகின்றது. இந்த வாழ்வகத்தின் முதல் நோக்கம் வலுவிழந்த பிள்ளைகளுக்கு கல்வியறிவையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தி விடுவதேயாகும்.

இப்பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்தே கற்கின்றனர். இதனால், இவர்கள் மனதில் தாம் ஒதுக்கப்படுவதாக எண்ணம் தோனறாது.

அநேகமான பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கண்பார்வை குறைவென்றவுடனேயே அவர்களின் சுயத்தை இழக்கச் செய்கிறார்கள். எந்தவிதமான வேலையும் செய்ய அனுமதிப்பதில்லை. தமது சுய தேவைகளைக் கூட நிறைவேற்ற அடுத்தவரின் தயவை நாடவேண்டிய சூழலை உருவாக்கிவிடுகின்றார்கள்.

ஆனால், இந்த 'வாழ்வகம்' பிள்ளைகளை சுயமாகச் செயற்படப் பயிற்சி அளிக்கின்றது. கூட்டுவது, கழுவுவது, சிறிய பிள்ளைகளுக்குப் பெரியவர்கள் உதவி செய்தல் என்று இப்படியான செயற்பாடுகளால் பிள்ளைகள் தத்தம் வீடுகளில் இயல்பாக வாழ்வது போலவே உணர்கின்றார்கள். இங்குள்ள பிள்ளைகளுள் அநேகமானவர்கள் தமது வீடுகளுக்குச் செல்வதற்கு விரும்புவதில்லை. கற்பதில் மிகவும் ஆர்வம் காட்டுகின்றார்கள். பாடசாலைக் கல்வியைத் தவிர விளையாட்டு, நடனம், சங்கீதம், பிறகலைகள் போன்றவற்றிலும் இவர்கள் சிறந்து விளங்குகின்றார்கள்.

இந்த இல்லத்தில் வாழ்ந்தவர்களுள் 4 பேர் இன்று பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகின்றார்கள். இங்குவாழ்பவர்கள் உயர்தரம் கற்கும் பொழுது அவர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வெளியில் கற்பதற்கு தூண்டப்படுகின்றனர்.

இன்று வலுவிழந்தோருக்கு வாழ்வளிக்கும் இல்லமாக மிளிரும் 'வாழ்வகம்' என்றும் ஒளியாகத் தன்னிலை குன்றாது சேவையாற்றும் என எதிர்பார்க்கின்றோம். ☆

## மைதானத்தில் கலாசாரச் சீரழிவு

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மைதானத்தில் இரவு நேரங்களில் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக அப்பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றார்கள. இந்து ஆலயங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள இநத மைதானத்துக்கு பாதுகாப்பு வேலிகள் அற்றுக்காணப்படுகின்றமையே இந்த நிலைமைக்கு காரணம் எனத் தெரிவிக்கபபடுகின்றது. மேற்படி கலாசாரச் சீரழிவு சம்பந்தமாக அப்பகுதி கிராம அலுவலருக்கும் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஒ-68)

## கற்குவியலின் மீது மோட்டார் சைக்கிள் மோதியது

வீதியோரத்தில் குவிக்கப்பட்டிருந்த கற்குவியல் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அதனைச் செலுத்தி வந்தவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்துள்ளார். கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு வேளை மீசாலை, புத்தூர் சந்திககருகில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த கணேசலிங்கம் விசிந்திரன் (வயது25) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ117)

### போஷாக்கு உணவுத் திட்டத்தின் கீழ்

# ஏழாலை வடக்கு பாடசாலையில் இலைக்கஞ்சி வழங்கும் வைபவம்

வலிகாமம்தெற்கு,ஓக.12

பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் த.வாமதேவன் தலைமையில் கடந்த வாரம் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்ட இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்றரக்கிளை முகாமையாளர் சி.விக்கினராசா கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.இப்பாடசாலை மாணவர்களுக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா பத்து அப்பியாசக் கொப்பிகளையும் அவர் அன்பளிப்பாக வழங்கினார்.

இவ்வைபவத்தில் சிறப்புரையாற்றிய முகாமையாளர் சி.விக்கினராசா -

பாடசாலை இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படும் போது இப்பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் சீருடைகள், நெறி நூல்கள், நீதிக்கதை புத்தக்கங்கள் போன்ற பல பொருள்களை தமது சொந்தப் பணத்தில் இருந்து அன்பளிப்பாக வழங்குவதாகத் தெரிவித்தார்.

இலைக்கஞ்சி வழங்கும் ஆரம்ப நிகழ்வில் உடுவில் கல்விக் கோட்டப்பணிப்பாளர் எஸ்.குபேரநாதன், கோட்டச் செயலாளரும் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலை அதிபருமான ந.சுப்பிரமணியம் உட்பட பெற்றோர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-152)

## புலமைப்பரிசில் பொதுப்பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் 5 ஆம தர மாணவர்களிடையே நடத்தப்பட்ட புலமைப் பரிசில் மாதிரிப் பொதுப் பரீட்சை முடிவுகள் அந்தந்த கோட்ட ரீதியாக வெளியிடப்பட்டுவருகின்றன.

உடுவில் கல்விக் கோட்டத்தில் இருந்து இப்பரீட்சைக்கு 742 மாணவர்கள் தோற்றினர். இவர்களுள் 102 மாணவர்கள் நூற்றுக்கும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். மிகவும் கூடிய புள்ளிகளைப் பெற்ற 20 மாணவர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படவுள்ளன என்று உடுவில் கோட்ட கல்வி பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்துள்ளார். (ஜ-152)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
12
-
12
-
1925



விண்ணில்
12
-
08
-
1994

### அமரர் பொன்னம்பலம் நடராசா

(இளைப்பாறிய அதிபர், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)

ஆண்டு பத்து ஆயின்வே ஆறவில்லை எம் துயரம்
கண்ணிருந்தும் குருடாகிக் கதறுகின்றோம் நாமே
விண்ணுலகம் சென்றுவிட்டீர் விடையறியோம் நாமே
கோன்முறை அரசனாகி குடும்பத்தை உயர்த்தி வைத்தீர்
வான்மழை இல்லாமல் வாடுகின்றோம் நாமே.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'அறிவகம்'
18, பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P. 021- 222- 6808 (35135)(21-13)


## STUDY IN INDIA
### Admission for Year 2004/05

**Courses Offered**

| Medical & Paramedical | Duration |
|---|---|
| MBBS | 5 ½ Yrs. |
| BDS | 5 ½ Yrs. |
| BPharma, BPT, BSc,-Speech & Hearing | 4 Yrs. |
| BMLT | 3 Yrs. |
| **General Degree Courses** | |
| BSc.- Genetics/Biotech./Bio-Che.- | 3 Yrs. |
| BSc.- Computer/Electronics | 3 Yrs. |
| BA- Journalism/Psychology | 3 Yrs. |
| * BCA-Computer Applications | 3 Yrs. |
| * BBM-Business Management | 3 Yrs. |
| * BHM-Hotel Management | 4 Yrs. |
| **LLB - International Law** | |
| LLB (A/L 50% in any stream) | 5 Yrs. |
| LLB (Any Degree with 40%) | 3 Yrs. |
| **BE - Engineering** | |
| Electronics & Communication | 4 Yrs. |
| Electrical & Electronics | 4 Yrs. |
| Telecommunication/Mechanical | 4 Yrs. |
| Computer/Information Science/etc. | 4 Yrs. |
| **Post - Graduation** | |
| *MCA, *MBA, MSc. (All Branches), etc. | 2-3 Yrs. |

* Professional Degree Program

**For Admission & Guidence**
**AHILAN**
**0777-564970, Logendran,**
**0714-840172**
**ICAM (PVT) LTD, 428, R.A.De. Mel Mw, Colombo-03**
Tel;011-2565091/2, 0777-564970.
17, Primrose Road, Kandy.
(சி-36555)(34) Tel:081-2203475, 0777-422579


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச்
சேர்ந்த
யாழ்.இந்துக்கல்லூரி மாணவன்
**செல்வன் துரைசிங்கம் கேசவன்**

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் 3A சித்தியையும் மாவட்ட மட்டத்தில் 4ஆவது இடத்தையும் தேசிய மட்டத்தில் 62ஆம் இடத்தையும் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் பல சிறப்புக்கள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

அத்தான் குடும்பம்
கோபி தொலைத்தொடர்பகம்,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

"கல்பனாஸ்",
இல.16, நவீன சந்தை,
சாவகச்சேரி. (சி-36550) (26)

## யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்:- 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 3.00 மணி (இ.நி.நே.)
இடம்:- பாடசாலை "B" மண்டபம்.

*அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளது.*
*அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அ. கயிலாயப்பிள்ளை,
தலைவர்/அதிபர். (C/36558)(43-21-13)

செ.செந்தூரன்
செயலாளர்


## டோகா, கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

30 நாள்களுக்குள் பயணம்

தொழில் : மேசன்

20,000/= மேல் சம்பளம், வேலைநேரம் 8 மணித்தியாலம் மட்டுமே. மேலதிக நேரக் கொடுப்பனவும் உண்டு. பயணத்திற்கான கட்டணத்தில் அரைவாசிக் கட்டணம் கடன் அடிப்படையில் செய்து தரப்படும்.

தொடர்பு : மைக்கல் 0777 - 279813

(சி-36479)(29-14-18)


## ஒன்பதாவது வருட நினைவுகளுடன்



அமரர்
**செல்லையா சண்முகநாதன்**
திதி: திரயோதசி (13-08-2004)

எங்கள் அன்புத் தெய்வமே அப்பா
நீங்கள் மறைந்தும் ஒன்பதாண்டுகள்
ஆனதப்பா
உங்களுடன் எப்படி வாழ்ந்தோம்
அதே நிலை மாறாமல் வேதனையுடன்
வாழ்கின்றோம்.

தோற்றம்
27-07-1943

மறைவு
25-07-1995

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

இணுவில் மேற்கு (35137) (21-13)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### பொன்னையா யோகலிங்கம்

(இளைப்பாறிய வைத்திய அதிகாரி)

ஜனனம்: 1926-05-21
அஸ்தமனம்: 2004-07-13

தந்தையாய் தாயாய் குருவாய் தலைவனாய்
அன்பதனைச் சொரிந்து அருகிருந்து ஆதரித்து
இன்பமாய் அழைத்து இதமுடன்தான் பேசி - என்
துன்பமெல்லாம் போக்கி துயர் துடைத்து
வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிசெய்து
பிரிய விடை கூறாது பிரிந்திட்ட மாயமென்ன?
பிணியென்றும் பாராது பணிகள் பலசெய்து
படுக்கையில் கிடந்தழுந்தாது பார் போற்ற
பரமனடி சேர்ந்தீரோ!

*உங்கள் ஆத்மா சாந்திபெற*
*எல்லாம் வல்ல வைரவப் பெருமானை வேண்டிநிற்கும்.*

பொற்பதீ றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மு.சுஜீதா,
இ.விதுஷா

(35141) (26-21-13)

## கடையில் திருட்டு

கோப்பாய், ஓக.12

கோப்பாய் சந்திக்கு அருகில் மானிப்பாய் வீதியில் உள்ள பல்பொருள் வாணிப நிலையமொன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு திருட்டுப் போயுள்ளது. குளிர்பானங்கள், பால்மா வகைகள் உட்பட 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடிச் செல்லப்பட்டுள்ளன.

இது குறித்து கோப்பாய் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (10-72)

## சீரமிய முறையில் உதவிகள்

வலிகாமம் தெற்கு, ஓக.12

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் விசேட உதவி தேவைபடுவோருக்கு விசேட சீரமிய முறைகளைப் பயன்படுத்தி உதவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், 'வீவோ' என்னும் ஜேர்மன் அரச சார்பற்ற நிறுவனம் ஆகியவை கூட்டாக இணைந்து மேற்படி திட்டத்தைச் சென்ற வாரம் ஆரம்பித்து நடைமுறைபடுத்தி வருகின்றன.

மல்லாகம் மகாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், ஆனைக்கோட்டை றோ.த.க பாடசாலை, யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயம், யாழ்.கன்னியர்மடம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட உதவி தேவைப்படும் மாணவர்களுக்கே விசேட சீர்மிய முறைகளைப் பயன்படுத்தி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக இப்பாடசாலைகளைச் சேர்ந்த 96 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் இவ்வாறான உதவிகளைப் பெற்று வருகிறார்கள். (10-152)

## சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.12

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

நிகழ்வில் செல்வன் பு.இரஜீபன் 'இந்து சமயத்தின் இன்றைய செல்நெறி' என்ற தலைப்பில் ஆன்மீக உரையினை வழங்குவார். சிவத்திரு. வி.செல்வந்தி நாதக்குருக்களின் இசைக்கச்சேரியும் இடம்பெறும். (10-201)

## பிரசுரங்கள் வெளியீடு

சுழிபுரம், ஓக.12

மிலக்வைற் நிறுவனத்தின் முன்னாள் தொழிலதிபர் அமரர் கலாநிதி க.கனகராசாவின் சேவையை நினைவு கூரும் முகமாக முல்லைத்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் சி.சண்முகநாதன வைத்திய ஆலோசனைகள் கொண்ட பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றார். (10-28-201)

## பொதுநோக்கு மண்டபங்கள்

தென்மராட்சி, ஓக.12

தென்மராட்சிப் பிரதேசத்தின் பாதிக்கப்பட்ட பிரிவுகளில் பொது நோக்கு மண்டபங்களை பிரான்ஸ் நாட்டின் ஹரித்தாஸ் அமைப்பினர் அமைக்கவுள்ளனர்.

வரணி, கரம்பைக்குறிச்சி, சரசாலை தெற்கு, கைதடி - நுணாவில், கொடிகாமம் தெற்கு, சங்கத்தானை ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் இந்தப் பொது நோக்கு மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன. (10-117)

## ஆரம்பப் பணிகள்

பருத்தித்துறை, ஓக.12

வடமராட்சி கிழக்குப்பகுதியிலுள்ள குடத்தனை, அம்பன் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தின். கீழ் மின் இணைப்பு வேலைகளுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென வல்லிபுரக் கோயிலில் இருந்து அம்பன் வரையான பிரதான நெடுஞ்சாலை ஓரம் மின் தூண்கள் நடப்படவுள்ளன.

வல்லிபுரக்கோயிலிலிருந்து அம்பன் வரை மின்சாரம் வழங்குவதற்கான நிதியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஒதுக்கீடு செய்துள்ளார். (10-118)

## சாரதி வெற்றிடங்கள்

கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உடையவர் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
**பிள்ளைகள் இல்லம்,**
சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாய.
(35149)(43)

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில் பழைய பொலீஸ் ஸ்ரேசனுக்கு முன்னால் ஒரு பரப்புக் காணி மேல் வீட்டுடன் (புரண பவனம்) விற்பனைக்குண்டு.
25 பரப்பு நெற்காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **செ.தில்லைநாதன்**
இளைப்பாறிய அதிபர்,
புளியடி வைரவர் கோயிலடி,
உடுவில் தெற்கு, சுன்னாகம்.
(24-21-19) **T.P.: - 0712 524550** (35109)

# பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு வலி. கிழக்கில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.12

வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சகல குடும்பங்களினதும் பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யும் பணிகள் இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பிரதேச செயலகம் அறிவித்திருக்கின்றது.

சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீளாய்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

மீளாய்வின்போது குறிப்பிட்ட குடும்பத்தலைவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை என்பனவற்றுடன் தவறாது சமுகமளிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுப் பணிகள் இடம்பெறும் கிராம அலுவலர் பிரிவுகள் வருமாறு:-

இன்று வியாழக்கிழமை -

இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய் மேற்கு, புத்தூர் வடக்கு.

13.08.2004 வெள்ளிக்கிழமை -

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் கிழக்கு, ஊரெழு, நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு, ஆவரங்கால் மேற்கு.

16.08.2004 திங்கட்கிழமை -

சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு, நவக்கிரி, ஆவரங்கால் கிழககு, அச்செழு, பத்தைமேனி.

17.08.2004 செவ்வாய்க்கிழமை -

தம்பாலை, கதிரிப்பாய், வாதரவத்தை இடைக்காடு, வளலாய், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு. (ஐ)

# முதிய விவசாயிகளை கௌரவிக்க ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஓக.12

விவசாயக் கால்நடை அமைச்சின் அனுசரணையுடன் யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அடுத்தமாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள முதியோர் தினத்தையொட்டி முதிய விவசாயிகளைத் தெரிவு செய்து கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதில் மிகவும் வயதில் மூத்த விவசாயிகள் உள்வாங்கப்படவுள்ளனர். இதுதொடர்பாக மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோரும் பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்களும் அந்தந்தப் பிரதேச மட்டத்தில் உள்ள கமநல சேவைத் திணைக்களங்களின் பெரும்பாக உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட விவசாய முதியவர்கள் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

இதில் யாழ். மாவட்டத்தில் இருந்து ஐந்து விவசாய முதியவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அடுத்த மாதம் நடைபெறவுள்ள முதியோர் தினத்தன்று கொழும்பிலுள்ள விவசாய கால்நடை அமைச்சின் அலுவலகத்தில் வைத்துப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் தெரிவித்துள்ளார். (ஐ-13)

## கிரிக்கெட் கழகங்களைப் பதிவுசெய்யுமாறு கோரிக்கை

வடமராட்சி,ஓக.12

வடமராட்சி மென்பந்துத் துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட துடுப்பாட்டக் கழகங்கள் மட்டுமே இனிமேல் போட்டிகளை நடத்தவோ, போட்டிகளில் பங்குபற்றவோ முடியும் எனச் சங்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைத் துணைப்பொறுப்பாளர் மாதுளன, வடமராட்சி மென்பந்துத் துடுப்பாட்டச் சங்கத்தை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இச்சங்கத்தில் இதுவரை பதிவுசெய்யப்படாத மென்பந்துத் துடுப்பாட்டக் கழகங்கள் நெல்லியடியில் உள்ள 'டோறா மல்ரி கொம்பிளக்ஸில்' விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பதிவுசெய்து கெள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## 'நல்லைக்குமரன் மலர்' வெளியீட்டுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஓக.12

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினர் வருடந்தோறும் வெளியிடுகின்ற 'நல்லைக்குமரன்' இதழின் 12ஆவது வெளியீட்டுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி வருடாவருடம் வெளியிடப்படுகின்ற 'நல்லைக் குமரன்' நூலின் வெளியீட்டுக்கான ஆக்கங்கள் இம்முறை ஏராளமாகவந்து குவிந்துள்ளன. அவற்றில் தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்றும் - இதழ் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

நல்லூர் உற்சவ காலத்தில் இந்த நூல் ஆலயச் சூழலில் வைத்து வெளியிடப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-13)

## வாகனசாரதிப் பயிற்சி முன்னோடிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட வாகனச் சாரதிப்பயிற்சிநெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மோட்டார் வாகனத் திணைக்கள வாகன செலுத்தல் பரீட்சைக்கான (Trial) திகதியும் வழங்கப்படவுள்ளதாக யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார். (ஐ-8-9)

## சனசமூக நிலைய ஆண்டு விழா

வடமராட்சி,ஓக.12

புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 49ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு முருகையன் கோயில் முன்றிலில் நிலையத் தலைவர் சி.ரமணன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைத் துணைப்பொறுப்பாளர் உமைகுமார் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (ஐ-173)

## குமாரின் நினைவு நாள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.12

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66 ஆவது பிறந்ததின நினைவுநாள் இன்று வியாழக்கிழமை யாழ். நகரில் உள்ள அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைமை அலுவலகத்தில் கட்சியின் தலைவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், செயற்குழு மற்றும் ஆசிய பிராந்தியக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்கள். (ஐ-173)

# நல்லூர் ஆலயச் சூழலில் ஒழுங்குபேணும் ஏற்பாடுகள் குறித்து மாநகரசபை அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஓக.12

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தின்போது மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை யாழ். மாநகர சபையில் நடைபெற்ற நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா காலத்தின்போது மேற்கொள்ளவேண்டிய ஒழுங்கு முறைகள் தொடர்பான கூட்டத்தில் இந்த ஏற்பாடுகள் குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

✳ நல்லூர் பெருந்திருவிழாக் காலத்தில் மேற்கொள்ளவேண்டிய வழமையான நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை மேற்கொள்ளும்.

✳ பிரதான வீதிகளில் அமைக்கப்படுகின்ற வீதித்தடைகளில் தலா இரண்டு பொலீஸாரும் மாநகர உத்தியோகத்தர்கள் 2 பேரும் தொண்டர் நிறுவன அங்கத்தவர்கள் 2 பேரும் கடமையில் ஈடுபடுவர்.

✳ ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதித் தடைகளில் மாநகர சபை உத்தியோகத்தர்களும் தொண்டர் நிறுவன அங்கத்தவர்களும் கடமையில் ஈடுபடுவர்.

✳ சாதாரண திருவிழா நாள்களின் போது அதிகாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் -

விசேட திருவிழா நாள்களில் அதிகாலை 3 மணிதொடக்கம் இரவு 10 மணிவரையும் - வீதிகள் தடைசெய்யப்பட்டுப் பாதுகாப்புப் பணி இடம்பெறும்.

✳ நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வீதித்தடைகளுக்கூடாக வியாபாரிகளின் வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப்படும்.

✳ பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் காலை 8.30 மணிவரை தடைகளுக்கூடாகப் பாடசாலை செல்ல அனுமதிக்கப்படுவர். பாடசாலை முடிந்து வீடு செல்லும்போது அவர்கள் மாற்றுவழியினைப் பயன்படுத்தவேண்டும்.

✳ சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் அதிகாலை 4 மணிக்குத் திறக்கப்படவேண்டும்.

✳ தடை முகாம்களுக்குள் வசிப்பவர்களுக்கும் தொழில் நிலையம் வைத்திருப்பவர்களும் வாகனம் கொண்டுசெல்வதற்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவர்கள் தமக்குரிய அட்டைகளில் குறிப்பிட்ட வீதித்தடை ஊடாகச் செல்வதற்கு மட்டுமே அந்த அனுமதி அட்டையினைப் பயன்படுத்தமுடியும்.

✳ எந்தச் சந்தர்ப்பத்திலும் எக்காரணம் கொண்டும் வாகனங்களைக் கோயில் வீதிகளில் நிறுத்தக்கூடாது.

✳ சகல பொது நிறுவனங்களும், அரச நிறுவனங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும், பாதுகாப்புப் பிரிவினரும் எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் தடைகளூடாக வாகனங்களைக் கொண்டுசெல்ல முடியாது. இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எழுத்துமூலம் அந்த அமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்படும்.

✳ சாரணர், மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணியினரும், சர்வோதயம் அமைப்பினர், சென். ஜோன்ஸ் படையணியினர், இந்து இளைஞர் பேரவையினர் ஆகியோர் ஆலயச்சூழலில் சேவையில் ஈடுபடவுள்ளனர். (ஐ-7)






சர்வோதயம் அமைப்பின் யாழ். மாவட்ட நிலையத்தினால் ஊரெழுவில் அண்மையில் கலாசார விழா நடத்தப்பட்டது. இவ்விழாவின் ஆரம்பத்தில் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ந.சிறிமனோகரன் மங்கள விளக்கேற்றுவதையும் அமைப்பின் ஊரெழு நிலையத் தலைவர் எஸ்.ரவிச்சந்திரன், திட்ட இணைப்பாளர் திருமதி ரூபி அருட்செல்வி, சர்வோதய மிதிவெடி அபாயக் கல்வி இணைப்பாளர் சிறிசண்முகம் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)*

# கொலையுண்டவர் உயிருடன் இருக்க கொலைச் சந்தேகநபர் சிறையில்!

யாழ்ப்பாணம்,ஓக.12

ஒருவருடத்திற்கு முன் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் குடும்பஸ்தர் ஒருவர் அராலியில் மறுமணம் புரிந்து உயிருடன் வாழ்ந்து வருகிறார் என்பதும், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதும் இப்போது தெரியவந்திருக்கிறது.

இந்த விடயம் தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியாவில் இடம்பெற்றுவருகின்றன.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

திருகோணமலை, கும்புறுப்பிட்டி, 5ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பொன்னையா செல்வராசா என்பவருடைய மனைவியை அதே இடத்தைச் சேர்ந்த இராகவன் தங்கவேல் என்பவர் சட்டவிரோதமாகத் திருமணம் செய்துள்ளார். சட்டவிரோதமாக மணம்புரிந்த பெண்ணுக்கு ஏற்கனவே 8 வயது மற்றும் 12 வயதுகளில் இரண்டு பிள்ளைகள் உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்த இரு பிள்ளைகளும் தமது தகப்பனாராகிய பொன்னையா செல்வராசாவை இராகவன் தங்கவேல் கொலைசெய்துவிட்டுத் தமது தாயாரைச் சட்டவிரோதமாகத் திருமணம் புரிந்ததாகத் திருகோணமலைப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, குறிப்பிட்ட நபரைக் கைதுசெய்த குச்சவெளிப் பொலீஸார், வவுனியா நீதிமன்றில் அவரை ஆஜர் செய்தபோது அவரை அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அதற்கு அமையக் குறிப்பிட்ட நபர், தற்போது அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஆனால், கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் நபர் அராலியில் வேறு திருமணம் புரிந்து வாழ்ந்து வருவதாகவும் - இதனை அறிந்த, சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நபரின் சகோதரி வவுனியா நீதிவான் கவனத்திற்குக் கொண்டுவந்தார் என்றும் கூறப்படுகிறது.

இதனையடுத்து உயிருடன் இருக்கும் நபரை நீதிமன்றின்முன் ஆஜர்செய்யும் பட்சத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரை விடுதலை செய்யமுடியும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து குறிப்பிட்ட நபரை வவுனியா நீதிமன்றில் ஆஜர்செய்வதற்கு உதவும்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

## சந்நிதியான் ஆச்சிரம நிகழ்வு

வடமராட்சி,ஓக.12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்குப் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ஐ-173)

## தம்பாட்டிக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

ஊர்காவற்றுறை,ஓக.12

ஊர்காவற்றுறை நகரில் இருந்து தம்பாட்டிக் கிராமத்திற்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இதன்பொருட்டு, ஊர்காவற்றுறையிலிருந்து தம்பாட்டிக் கிராமத்திற்கு நிலத்திற்குக் கீழே குழாய்கள் பொருத்துவதற்கு வசதியாக மேற்படி கிராம மக்கள் ஒன்றிணைந்து வாய்க்கால்கள் வெட்டி வருகின்றனர்.

இக்கிராமத்திற்கான குடிதண்ணீர் விநியோகம் தற்சமயம் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் பவுஸர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-16)

## மிதிவெடி அறிவுறுத்தல் பலகைகள் நீக்கம்

கோப்பாய்,ஓக.12

கோப்பாய் தரவைவயச் சூழவுள்ள வெளிப் பிரதேசங்களில் இனம்காணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட மிதிவெடி, பொறிவெடி அடையாளப்பலகைகள், குறியீட்டு நாடாக்கள் ஆகியவற்றை விஷமிகள் அகற்றி விடுவதாகக் கூறப்படுகிறது. இதனால், மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினர் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகக் கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் கவலை வெளியிட்டுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கி குறித்த பிரதேசங்களைப் பாதுகாப்பான பகுதிகளாக விரைவில் மாற்ற உதவும்வண்ணம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-72)

# முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் உடைகிறது; அதாவுல்லா பக்கம் பாய்கிறார் அமீர் அலி!

ஏறாவூர்,ஒக.12

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எஸ். அமீர் அலிக்கும் கட்சித் தலைமைத்துவத்துக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. இதனால், முஸ்லிம் காங்கிரஸுக்குள மற்றுமொரு பிளவு ஏற்படும் நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலி தனது சொந்த பிரதேசமான கல்குடாத்தொகுதி முஸ்லிம் பகுதிகளில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற வைபவங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தை மேடைகளில் பகிரங்கமாகவே விமர்சித்து வந்தார். கல்குடாத்தொகுதி அபிவிருத்தியை மட்டும் கருத்திற்கொண்டு தாம செயற்படப்போகிறார் எனவும் கூறிவந்தார்.

அண்மைக்காலங்களில் இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த ஹக்கீம்-குமாரிகுரே சர்ச்சை விவகாரத்திலும் அமீர் அலி எம்.பிசம்பந்தப்பட்டிருந்தார் என குமாரி குரே தனது தொலைக்காட்சிப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் இவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதை தவிர்த்து வந்தது.

ஆனால், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஏறாவூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில வைத்து அமீர் அலி எம்.பியின் நடவடிக்கைகளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பகிரங்கமாகவே விமர்சித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தின் கட்டுப்பாட்டையும் கட்சிக் கட்டுக்கோப்பையும் மீறி தனது சொந்த அரசியல் நலனை மட்டும் கருத்திற்கொண்டு அமர் அலி எம்.பி செயற்படுகிறார் என ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம், அமர் அலி ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸில் இருந்து வெளியேறி அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளார் என அமீர் அலி எம்.பிக்கு மிக நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதற்குப் பிரதிவுபகாரமாக அமைச்சர் அதாவுல்லா தனது கிழக்குமாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கான முழுபொறுப்புக்களையும் அமீர்அலி எம்.பியிடம் ஒப்படைக்கவுள்ளார் எனவும் மட்டக்களப்பு மாவட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சராக அமீர் அலி எம்.பி பதவியேற்பார் எனவும் கூறப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அண்மையில் வெளியேற்றப்பட்ட எம்.பிக்களான நிஷாத் பதியுதீன், ஹுஸைன் பைலா, நஜீப் அப்துல், மஜீத் ஆகியோர் நீதிமன்றில் தாக்கல்செய்துள்ள வழககின் தீர்ப்பில் அமீர் அலி எம்.பியின் கட்சிமாறும விடயம் தங்கியுள்ளது என்றும் குறித்த எம்.பிக்களுக்கு சாதகமாக இந்த வழக்கின் தீர்ப்பு அமையும் பட்சத்தில் அமீர் எம்.பியின் கட்சி மாறும் படலம் உடனடியாக நடைபெறும் என்றும் - தெரியவருகின்றது.

அண்மைக்காலங்களில் அமைச்சர் அதாவுல்லாவுடன் அமீர் அலிஎம்.பி மிகவும் ஐக்கியமாக செயற்படுவதுடன் கிழக்குமாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கல்குடாத் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

## 'வாழும் கலை' தொடர்பாக சிறுவர்களுக்குப் பயிற்சியளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.12

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைகளத்தின் ஏற்பாட்டில், 'கோகுலம்' அறநெறிப் பாடசாலை, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான வாழும் கலைப்பயிற்சி எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நான்கு தினங்கள் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சரஸ்வதி மகாவித்தியாலய அதிபரும், அறநெறிப் பாடசாலைக் காப்பாளருமான க.சோமசேகரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை முன்னாள் தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் சிவத்திரு. சு.செந்தில்நாதனும் வரவேற்புரையை அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளா சிவதர்மவள்ளல் சி.சச்சிதானந்தனும், தொடக்கவுரையை இந்துகலாசாரத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் வழங்குவார்கள்.

அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான வாழும் கலைப் பயிற்சிகளை பெங்களூர் வாழும கலை நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்ரீரவிசங்கர் சுவாமிகளின் சிஷ்யர்களான லலிதா பத்துசாமி மற்றும் எஸ்.சாந்தகுமார் ஆகியோரும் வழங்குவர்.

நீர்வேலிப் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு நீர்வேலி சி.சி.பாடசாலையிலும் - சங்கானைப் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலய மண்டபத்திலும் இப்பயிற்சிகள் வழங்க ஏற்பாடாகியுள்ளது. (ஐ-5)

### பாடசாலைக்கு அன்பளிப்பு

சுழிபுரம்,ஒக.12

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலத்தின் பழைய மாணவியும் தற்போது சுவிஸில் வசித்துவருபவருமாகிய திருமதி வி.பொன்விழி சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கணனிக்கான 'ஸ்கானர்' இயந்திரம் ஒன்றைப் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (10-28-201)

### பவளவிழா ஏற்பாடுகள்

சுழிபுரம்,ஒக.12

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வராக் கல்லூரியின் பவளவிழாவை யொட்டி அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி விழாவை யொட்டி, பவளவிழா மலர் வெளியீட்டை மேற்கொள்வதற்காக கல்லூரி அதிபர் தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்று அமைகப்பட்டுள்ளது.

விழாவிற்கான நிதியினைச் சேகரிப்பதிலும கல்லூரிச் சமூகம் ஈடுபட்டுள்ளது.

(10-28-201)

### முன்பள்ளிகளுக்கு நூல் வழங்கும் விழா

யாழ்ப்பாணம்,ஒக.12

யாழ்.வலயத்துக்குட்பட்ட முன் பள்ளிகளுக்கு 'அரும்புகளின கீதங்கள்' நூல் வழங்கும் விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராசா தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், மாவட்டதமிழீழக் கல்விக் கழக பொறுப்பாளர் சி.ஆர்வலன், மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா, யாழ். கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், எழுததாளர் தெணியான் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

மேற்படி நூல் அல்வாய் வடக்கு கதிர்காமு சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெளியீடாகும். (ஓ)


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள மவுக்கினி சோக்கேஸ் மூன்றும், முதிரை சோக்கேஸ் ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தணிஸ் ரெக்ஸ், நவாலி வீதி, மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (34899)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் 1¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0112502453 (சி-36570)

கோண்டாவில் கிழக்கு, பலாலி - இருபாலை வீதிச் சந்தியிலிருந்து 100 அடி தூரத்தில் இருபாலை வீதியில் 15 அடிப் பாதையுடன் கிணற்று நீர் வசதியோடு 6¾ பரப்பு நல்ல காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மு.நவரட்ணராசா, 159/2, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்துக்கு முன் ஒழுங்கை) T.P. No.077 6320676.(35131)

### கைமாறி விட்டது

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கா.விக்கி என்பவருடைய சைக்கிள் கடந்த வாரம் யாழ்ப்பாண நகரத்தில் வைத்து கைமாறி எடுத்துச்செல்லப்பட்டுவிட்டது. மாறி எடுத்தவர்கள் தயவுசெய்து இல.14, கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 077 6100318.(35162)

### மணமகள் தேவை

யாழ்.இந்துகௌரவ குடும்ப, சுவாதி, வயது 34, அசைவ, செவ்வாய்க்குற்றமற்ற, அழகிய லண்டன் வாழ் கணக்கியல் பட்டதாரி மணமகனுக்கு லண்டன், கனடா வதிவிட உரிமை பெற்ற தகுதியான அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: க.வி.மயில்வாகனம், ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர், கைதடி. (35112)

### தவறிவிட்டது

திருமதி சத்தியநாதன் சறோஜினிதேவியின விசேட அடையாள அட்டை ஞாயிற்றுக்கிழமை 01-08-04 யாழ்ப்பாணத்திற்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.மயூரதன் கணக்காளர் பகுதி, உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (35154)

தேவராசா கண்ணதாசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வங்கிக்கணக்கு ஆவணங்கள், ஒரு காணி உறுதி, உடுப்புகள் என்பன அடங்கிய Bag (பை) 04-08-2004 புதன கிழமை மாலை முகமாலை சோதனைச் சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.மி. பாடசாலையடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ. இல.: 077 6220416, 077 6060448 - 48.(சி-36548)

### கோழிக்குஞ்சு விநியோகம்

அதிவிசேட Prima Broiler குஞ்சுகளும் (மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு 36/-) சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும 19-08-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ் ஆனைகோட்டை சந்தி T.P. 2867, 077 6090926, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை, முதலாம் கட்டை பருத்தித்துறை, ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம் முன், ரஞ்சீத் 517, ஸ்ரான்லி றோட், யாழ். (35150)

### தேவை

பில் கிளார்க் ஒருவரும், தொலைத் தொடர்புச் சேவைப்பகுதியில் வேலை செய்வதற்கு ஒருவரும் தேவை. (பெண்கள் மட்டும்) 15.08.2004 இற்கு முன்னர் நேரில் வரவும்.

**சன்லைற் றைக்கிளீனஸ்**
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
(35165) (43-21-17-19)

**Computer Courses**
Diploma in Computerized Accounting
Diploma in AUTOCAD
Diploma in Internet E-mail
Diploma in Microsoft office 2003
Diploma in Computer Hardware Engineering
புதிய பிரிவு ஆரம்பம் 14-08-04
மேலதிக விவரங்களுக்கு:
43, Arasady Road,
Thaddatheru Junction, T.P: 021 2225170
Jaffna, Srilanka. (சி-36566)(21-19-32-19)

**G.A.Q., 1st in Com.** யாழ்- பேராதனை (வெளிவாரி)
A/L பரீட்சை எடுத்த மாணவர்கள் நலன் கருதி புதிய பிரிவு ஆரம்பம்: 28.08.2004 (காலை.8.00 மணி)
A/L 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாவர்.
விண்ணப்பப்பத்திர விவரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.
**B.A. FINAL**
விரிவுரைகள் ஆரம்பம்: 14.08.2004 (காலை.8.00)
விவரங்களுக்கு
S.அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(35163)(43-21-19-17)

### முக்கிய அறிவித்தல்

தரமான Prima ஒரு நாள் கோழிக்குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது.
Broiler குஞ்சு ரூபா 35/=
பேட்டுக்குஞ்சு ரூபா 56/=
CEYLON GRAIN ELEVATORS LIMITED,
No.15, ROCK HOUSE LANE, COLOMBO-15
ஏக விநியோகஸ்த்தர்:- Nallur, Farm Centre
19, Murugesar lane, Nallur

உப விநியோகஸ்தர்கள் :-
1. Nallur Farm Centre, பிரதான வீதி, பருத்தித்துறை
2. Suddi Farm Centre சங்கரத்தை, வட்டுக்கோட்டை
3. New R.S.K.Farm உடுவில்
4. Murugan களஞ்சியம், சாவகச்சேரி
5. லம்போதரன், கோப்பாய் சந்தி, கோப்பாய்
6. விநாயகா, தபால்கட்டைச் சந்தி, அரியாலை

குறிப்பு :- இரண்டு தடுப்பூசிகள் போடப்பட்டது. அத்துடன் Original Prima கோழித்தீன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
**முருகேசு ஸ்ரீஸ்கந்தராஜா**
(அதிபர் யா/சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை, குடத்தனை. (35156)(21-19-17)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவமணி முத்தையா



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிபபிடமாகவும் கொண்ட திருமதி தவமணி முத்தையா அவர்கள் 09.08.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் தம்பையா-முத்துப்பிள்ளையின் மகளும திருமலர் (சிங்கப்பூர்), தங்கரத்தினம் (கனடா), தனலட்சுமி (உரும்பிராய்), மங்கையர்க்கரசி (உரும பிராய்) காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சிவசோதி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கனடா) காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற முருகையா, சண்முகம் மற்றும் ஆறுமுகம், சோதிவேல், சாந்தினி, தங்கநாயகம், நந்தினி, குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ராஜ்மோகன், சுரேஸ், ரமேஸ், கௌரி, விஜி, சிவனேஸ், ரஜனி, நகுலன், கிரிஜா, ரஜி, சுமதி, ராஜன், துஷ்யந்தி, சாமினி, கோபிகா, செந்தில், அனோஜா, நிரோஜா, திவ்யா, மயூரன், செந்தூரன், சகாரன், வினுதினி, சுசலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2004) வியாழக் கிழமை பி.ப. 2.00 (பு.நே) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லபபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (35155)(43-21-19-17)

### முருகேசு ஸ்ரீஸ்கந்தராஜா J.P.

(அதிபர், யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஸ்ரீஸ்கந்தராசா J.P. அவர்கள் 09-08-2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ. சங்க முன்னாள் பணியாளரும் சங்கத் தலைவரும் தற்போதய இயக்குநர் சபை உறுபபினரும் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-08-2004) வியாழக் கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10.00மணிக்கு குடும்ப மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

"ஸ்ரீஸ்தான்"
தாமரைக் குளத்தடி,
துன்னாலை.
(சி-36567)(32-19-17-21)

# 'ஜி.ஜி' அச்சுறுத்தல்

## வெல்ல முடியுமா?

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலிலும் பார்க்கப் பலமடங்கு மோசமானவையான விண்கற்கள், இராட்சத கடல் அலைகள், எரிமலைகள் மற்றும் நிலநடுக்கம் என்றவாறு மனிதகுலத்தை அச்சுறுத்தும் இயற்கையை வெல்வதில் நாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிறோம் - இப்படி விஞ்ஞானிகள் பெருமைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மனித குலத்தை அச்சுறுத்தும் புவிப் பௌதிகச் செயற்பாடுகளை விஞ்ஞானிகள் ஜி.ஜி. ('Gee Gee') என்று பெயரிட்டுள்ளார்கள். ஜி.ஜி நிகழ்வுகளைத் தீவிரமானவையாகக் கருதும் தன்மைபோதாது என்றும் விஞ்ஞானிகள் குறைப் பட்டுக்கொள்கிறார்கள். இதன் ஆபத்துக் குறித்து கணகாணிப்பதற்கும் அதனால் ஏற்படக்கூடிய கொடுமையினை வெற்றி கொள்வதற்கான உத்திகளை வகுப்பதற்கும் உலக சமுதாயம் தயாராக வேண்டியது இன்றைய அவசியமாகும்.

"எப்படியிருந்தாலும் விண்கற்கள் பூமியைத் தாக்குவது போன்ற ஆபத்தினைக் குறைப்பதில நாங்கள் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளோம்" என்று பிரிட்டனின் றோயல் நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள் விண்வெளி ஆய்வாளர்கள்.

### உலகப் பாதுகாப்பு

அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட 'செப்ரெம்பர் - 9' தாக்குதலின் பின்னாகத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் தொடர்பில் உலகெங்கும் அதீத பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாங்கள உண்மையிலேயே உலகைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவிட்டோமா என்பது மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

பயங்கரமான வெள்ளப் பெருக்குகளால் கரையோரப் பிரதேசங்கள் நாசமாகிவிடலாம். எரிமலைகள் நகரங்களைச் சாம்பராக்கி விடலாம். பாரிய நிலநடுக்கங்களும் விண்கற்களின் மோதுகையும் பல ஆயிரக்கணக்கான பிரதேசங்களைத் துவம்சம் செய்யலாம். இவையாவும் அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களும் நாங்கள் அதிர்ஷ்டசாலிகளாக இருந்தால் இவற்றில் எதுவுமே எமது வாழ்நாளில் இடம்பெறாதும் போகலாம். ஆனால், நீண்டகால நோக்கிலே 'ஜி.ஜி' நிகழ்வுகளை எதிர்கொள்வதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ளாதுவிடில் அவை ஒட்டுமொத்த புவியின் அழிவுக்கு வழிவகுக்கும். ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி 'Gee Gee' நிகழ்வுகளில் இருந்து பாதுகாப்பதற்காகச் செய்யப்பட்ட முன்னேற்றப்பாட்டு நடவடிக்கைகளினால் தற்போது ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்கின்றார்கள்.

### விழிப்புணர்வு வேண்டும்

"அடையாளங்காணப்பட்ட அச்சுறுத்தல்கள தொடர்பில் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்வதும் அவை குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதும் எமது தேவையாகும்" என்று ஆராய்ச்சியாளர் பில் எம்சிகுரே (Bill Mc Guire) தெரிவித்தார்.



பூமியின் மீது கோளொன்று மோதும் இந்தக் கற்பனைக் காட்சியை 'நாஸா' வெளியிட்டது.

"குறித்த ஒரு வருடத்தில் 'Gee Gee' நிகழ்வுகளால் பாதிப்பு ஏற்படும் சாத்தியக் கூறு ஒரு வீதத்திலும் குறைவானதாகும். ஆனால், நீண்டகால நோக்கில் நிச்சயமாக அதாவது நூறுவீத சாத்தியத்துடன் அவை நிகழும் அப்படி நிகழும்போது நாங்கள் என்ன செய்யவேணடும் என்று திட்டமிடவேண்டியிருக்கிறது" - என்றார் எம்சிகுரே.

### எரிமலைக் குழம்பு

எரிமலைகளும் புவிநடுக்கங்களும் சாதாரணமாகவும் ஏற்பட்டுள்ளன. ஆனால், 'ஜி.ஜி' எனப்படும்போது பிரமாண்டமான அளவில் இடம் பெறுவதனைக் கருதலாம். 1815 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இந்தோனேசியாவில் ரம்போராவில் இடம்பெற்ற மிகப்பெரிய எரிமலைத் தாக்கத்தினால் 92ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எரிமலைக் குழம்புகள், 44 கிலோ மீற்றர் உயரத்துக்குத் துள்ளி எழுந்து, ஆயிரத்து 300 கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து பாரிய சேதத்தை அப்போது விளைவித்திருக்கின்றன. அரிதாக இடம் பெற்றாலும் இவ்வாறான கோரச்சம்பவங்கள், தீவிரமான நடவடிக்கையைக் கோரிநிற்கின்றன.

லாபல்மாவின் கனறி தீவிலுள்ள ஸ்திரமற்ற பெரிய பாறை ஒன்றின் மீது தற்போது விஞ்ஞானிகளின் பார்வை விழுந்துள்ளது.

பெரியதொரு தீவின் பரிமாணமுள்ள இந்தப் பாறையே தற்போதைய உலகின் அச்சுறுத்தலாகக் கொள்ளப்படுகின்றது. இந்தப் பாறை கடலுக்குள் மூழ்கிக் கொண்டே இருக்கிறது. இப்பாறை முற்று முழுதாக மூழ்கும் போது எழும் இராட்சத கடல் அலையினால் அமெரிக்க ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் கரையோரப்பகுதிகளில் மிகப் பெரிய அழிவுகள் ஒரு மணிநேரத்துக்குள்ளாகவே ஏற்பட்டுவிடும் என விஞ்ஞானிகள் அஞ்சுவதாக பேராசிரியர் எம்.சி.குரே தெரிவித்தார்.

முடிவாக முழுப்பாறையும் கடலுக்குள் மூழ்கும்போது அத்லாண்டிக் கரையோரத்தில் பெருமநாசம் நிகழும் என்றும் அவர் கூறினார். இதன் தொடர்ச்சியாக லாபல்மாவிலுள்ள 'கும்ரே வெஜா' (Cumbre VieJa) என்ற எரிமலையும் எந்நேரமும் கக்குவதற்கான சாத்தியக் கூறு உண்டு.

பெருமளவு 'ஜி.ஜி' ஆராய்ச்சியாளர்கள் 'கும்ரே வெஜா' எரிமலைப்பிரதேசத்தை கண்காணிக்க உள்ளார்கள். இதனால், பாறையினால் ஏற்படக்கூடிய அழிவுகள் தொடர்பாக அவர்களால் முன் கூட்டியே எச்சரிக்கைகளை விடுக்கக் கூடியதாக இருக்கும்.

"எரிமலை கக்குவதற்கு ஆரம்பிக்கையில் அங்கிருந்து நாங்கள் வெளியேறியிருக்க வேண்டும். இல்லையேல் மிகப் பெரிய நகரத்தை காலி செய்வதற்கு நேரம் போதாமல் இருக்கும்" என்றார் பேராசிரியர் எம்.சி.குரே.

### அண்டவெளி அச்சுறுத்தல்

உலக நாடுகளின் அரசாங்கங்கள் 'ஜி.ஜி' அச்சுறுத்தலை முற்று முழுதாக அசட்டை செய்து விடவில்லை. மனித குலத்திற்கு மிகப் பெரிய சவாலான விண்கற்களினால் ஏற்படும் அச்சுறுத்தலை துரிதமாக சமாளிப்பதற்கு அமெரிக்க அரசு பெருமளவு நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது.

ஐரோப்பிய விண்வெளி நிலையமான 'ஈசா'வும் (ESA-European Space Agency) அமெரிக்க விண்வெளி நிலையமான 'நாசா'வும் (NASA- National Aeronautics and Space Administration) விண்கற்களினதும் சிறு கோள்களினதும் மோதுகைகளில் இருந்து எவ்வாறு பூமியைப் பாதுகாக்க முடியும் என்ற ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்தியுள்ளன.

விண்கலம் தொடர்பான அவதானிப்புக்காக 'ஈஸா' நிறுவனம் விண்வெளி ஓடம் ஒன்றை எதிர்வரும் 2005 ஆம் ஆண்டில் அனுப்பத் திட்டமிட்டுள்ளது. 'நாஸா' அமைப்பும் இது தொடர்பான தனது ஆய்வுகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

விண்கற்களைப் பூமியுடன் மோதாதவாறு எவ்வாறு திசை மாற்றுவது அல்லது அழிப்பது என்பதை அறிந்து கொள்ள இந்நடவடிக்கைகள் உதவும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

பிரிட்டனின் ஜோன் மூர்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பெனி பைஸெர் (Benny Peiser) கூறுகையில்,"அடுத்த முப்பது ஆண்டுகளுக்குள் அண்டைவெளியில் பாரிய ஆபத்துக்களை முக்கியமாக இல்லாமல் செய்து விடுவோம்" என்றார். "அதிகளவில் அறியப்படாத தொழில்நுட்பப் புரட்சியின் மூலம் பூமிக்கு அண்மையான விண்கற்கள் அடுத்தடுத்துக் கண்டுபிடிக்கப்பட்டன. 1995 ஆம் ஆண்டில் 300 'நியாஸ்' (NEAs - near -Earth asteroids) மட்டுமே கண்டறியப்பட்டுள்ளன. தற்போது அவை 3ஆயிரமாக உள்ளன. இன்னும் 20 வருடங்களில் பூமிக்கு அண்மையில் உள்ள 90 வீதமான விண்கற்களை நாங்கள் கண்டறிந்துவிடுவோம்" என்றார் அவர். "பரிணாம வரலாற்றில் முதன் முறையாக மென்மையான வாசல்களை நாங்கள் மூடியிருக்கிறோம்" இப்படி பெனி பைஸெர் கூறினார்.

★

# கையடக்கத் தொலைபேசி

இன்றைய உலகில் அத்தியவசியமான ஒன்றாக கையடக்கத் தொலைபேசிகள் கருதப்படுகின்றன. புதுப்புது அம்சங்களைப்புகுத்தி ஒவ்வொரு கையடக்க தொலைபேசி நிறுவனங்களும் வியாபாரப்போட்டியை வலுவானதாக்கிக் கொண்டிருக்கின்றன.

செல்லுலர் அமைப்பின் ஓர் அங்கமே கையடக்கத் தொலைபேசியாகும். செல்லுலர் அமைப்புடன் இணைந்து கையடக்கத் தொலைபேசியால பணிகள் ஆற்றப்படுவது குறித்த அடிப்படை அமைப்பை நாமும் அறிந்துகொள்வோம்.

செல்லுலர் அமைப்பு மூன்று துணை அமைபபுக்களைக் கொண்டது. கையடக்கத் தொலைபேசி தளநிலையம் மற்றும் கையடக்க தொலைபேசி நிலைமாற்றும் அலுவலகம், (Mtso-Mobil Telephone Switching Office) என்பனவாகும். இம் மூன்று அமைப்புக்களையும் அவற்றை இணைக்கும் தொகுப்புக்களுடன் படத்தில் காணலாம்.


கையடக்கத் தொலைபேசி:- கட்டளை அலகு, செலுத்தி - ஏற்பி மற்றும் அன்ரெனா என்ற அமைப்புக்களைக் கொண்டது.

தளநிலையம்:- கையடக்கத் தொலைபேசிகளுக்கும் கையடக்கத் தொலைபேசி நிலைமாற்றும் அலுவல கத்துக்கும் இடைமுகப்பாக (Interface) விளங்குவதே தள நிலையம். கட்டளை அலகு, வானொலிப் பெட்டிகள், அன்ரெனா, மின்பிறப்பாக்கி மற்றும் தரவு முனையங்களை (Data Terminals) கொண்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசி நிலைமாற்றும் அலுவலகம்:- மைய ஒருங்கிணைக்கும் உறுப்பாக எல்லா தளநிலையங்களும் திகழ்கின்றது. செயலி மற்றும் நிலைமாற்றிகளை தன்னகத்தே கொண்டது. அழைப்புக்களை முறைவழிப்படுத்துதல் மற்றும் தொலைபேசிக் கம்பனியின் வட்டார அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு கட்டண விவரங்களைக் கணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுகின்றது.

தொடுப்புகள்:மூன்று துணை அமைப்புக்களும் ரேடியோ மற்றும் அதிவேக தரவு இணைப்புக்களால் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு அமைப்பாக கட்டப்படுகின்றது. ஒவ்வொரு கையடக்க தொலைபேசியும் தொடர்பாடல் இணைப்புக்காக ஒரு வழித்தடத்தைப் பயன்படுத்தலாம். இந்த வழித்தடம் நிலைபெற்ற ஒன்றல்ல, மாறாமல் இருக்காது. சேவை வட்டாரத்தில் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட வழித்தடங்களில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம். தளநிலையம் ஒவ்வொன்றும் பல வழித்தடங்களைப்பயன்படுத்தி ஒரே நேரத்தில் பல நடமாடும் நபர்களைக் இணைக்கவல்லன.

கையடக்கத் தொலைபேசி நிலைமாற்றும் அலுவலகம் இதன் உயிர்த்துடிப்பாக விளங்குகின்றது. அதன் மைய ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாகப்பணியை செயலாற்றுகின்றது. 'நிலைமாற்றி' நடமாடும் சந்தாதாரர் அல்லது நாடு தழுவிய தொலைபேசி கட்டமைப்புக்கு திருப்பும் செயலாற்றுகின்றது. MTSO தொலைபேசி அலுவலகங்களிடையே பயன்படுத்தப்படும் குரல தண்டுகளுக்கு ஒத்த குரல் தண்டுகளைப் பயன்படுத்துகின்றது. இது போக கண்காணிப்பு இணைப்புகளென தரவு இணைப்புகள் செயலிற்கும் நிலைமாற்றிக்கும் இடையில் தள நிலையங்களுக்கும் செயலிக்கும் இடையில் வழங்கி வருவதைக்காணலாம். ரேடியோ இணைப்புக் குரல் சமிக்கைகளை கையடக்கத் தொலைபேசிக்கும் தளநிலையத்திற்கும் இடையே தொடர்பாடல் இணைப்பு வழங்குகின்றது. அதிவேகத்தரவு இணைப்புகளை சாதாரண குரல் தரதண்டுகளால் (Voice grade trunks) வழங்க முடியாது. நுண்ணலை இணைப்பு (Micro-wave Link) அல்லது T-Carrier (உயர் ரக கம்பி இணைப்பு) தள நிலையத்துக்கும் கையடக்கத் தொலைபேசி நிலைமாற்றும் அலுவலகத்திற்கும் இடையில் வேண்டியுள்ளது.




# கறை நீக்கும் விஷம்

கறையை நீக்கும் பொருளகளின் வரிசையில் தற்போது புதிய கறை நீக்கி சேர்ந்துள்ளது. பாம்பு விஷத்தைப் பயன்படுத்தி துணிகளில் படிந்திருக்கும் ரத்தக் கறைகளை நீக்க முடியும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



பாம்பின் விஷத்தில் உள்ள நொதியங்கள் புதிய கறை நீக்கிகளின் வரிசையில் சேர்ந்துள்ளன. பாம்பின் விஷம் என்பது பாம்பின் ஜீரண நீர் ஆகும். தற்காத்துக்கொள்ள எதுவும் இல்லாததால் பாம்பின் ஜீரண நீரே பாம்பிற்கு தற்காப்பாகப் பயன்படுகின்றது.

கறை நீக்கும் கலை குறித்த ஆய்வுகள், இரசாயனவியல்துறை, உயிர் இரசாயனவியல் துறை, மருத்துவ அறுவை சிகிச்சைத்துறை, நுண்ணியிரியல்துறை ஆகியவற்றில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கறை நீக்கும் கலை என்பது நுண் கிருமிகளை நீக்குதல், நசிந்த தசைக் கலங்களை நீக்குதல் ஆகியவற்றையும் உள்ளடக்கி உள்ளதால் இது குறித்த ஆய்வில் இரசாயன வியல் துறையும், மருத்துவத்துறையும் இணைந்துள்ளன.

பாம்பின் விஷத்தின் பல்வேறு பரிணாமங்கள், பயன்கள் குறித்த ஆய்வுகளும் விரிவான அளவில் நடைபெற்று வருகின்றன. கூட்டு ஆய்வில் பாம்பின் விஷத்தின் புதிய இயல்பான கறைகளை நீக்கும் இயல்பு கண்டறியப்பட்டுள்ளது.

அட்டை, சிலந்தி, உண்ணி ஆகியவற்றில் சுரக்கும் ஜீரண நீருக்கும் ரத்தக் கறைகளை நீக்கும் தன்மை உள்ளதா என்பதைப் பற்றி ஆய்வு தொடர்கின்றது.

பாம்பின் விஷம் அதிக விலை உள்ளதால் விஷமுள்ள மற்ற உயிரினங்களின் ஜீரண நீரைப் பயன்படுத்தி ஆய்வுகள் தொடர்கின்றன.

# மின்சாரப் பூவே !

ஜப்பானில் ஒலிபெருக்கிகளுக்குப் பதிலாக பூக்களைப்பயன்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இயற்கையான பொருள்களைப் பயன்படுத்தும் முறை தற்போது இயற்பியல் துறையிலும் (Physics) புகுந்துள்ளது.

மின்னோட்டங்களை ஒலியாக மாற்றும் பணியினை இந்த இயற்கைப்பூக்கள் செய்கின்றன. இவ்வாறு மின்னோட்டங்களை ஒலியாக மாற்றுவதோடு மட்டுமல்லாமல் ஒலியின் அளவைப் பெருக்கும் தன்மையையும் இந்த இயற்கைப் பூக்கள் கொண்டுள்ளன.

பொதுவாக அக்காலத்தில் ஒலிபெருக்கியாக கோணவடிவத்தில் செய்யப்பட்ட காகிதம் அல்லது உலோகமோ பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இந்தப் புதிய இயற்கைப் பூக்களே ஒலிபெருக்கியாகச் செயற்படும் கருவிகளுக்கு ஜப்பானில் நல்ல வரவேற்பு உள்ளது. இயற்கை ஆர்வலர்கள் சங்கம் இந்தப் புதிய கருவியைப் பிரபலமாக்க முழு அளவிலான முயற்சியை எடுத்து வருகின்றது.

இந்தப் புதிய கருவியின் காந்தச் சுருள், அலைவுகளை ஏற்படுத்துவதற்கான கருவி ஆகியவை உள்ளன. இந்தக் கருவியின் உள்ளே இயற்கைப் பூவும் வைக்கப்பட்டுள்ளது. இருதிசை மின்னோட்டம் (Alternating Current) கருவியில் செலுத்தப்படுகின்றது. இவ்வாறு செலுத்தப்படும் மாறுதிசை மின்னோட்டம் அதிவேகத்தில் அலைவுகளை ஏற்படுத்துகின்றது.

அதிவேக அலைவுகள் காரணமாக இயற்கைப் பூக்களில் இருந்து ஒலி அலைகள் ஏற

**சுடரும் விஞ்ஞானம்**
**ராஜபுத்திரன்**

படுகின்றன. இயற்கைப்பூக்களே மின்னோட்டத்தை ஒலி அலைகளாக மாற்றுகின்றன.

இயற்கைச்சூழலில் - இயற்கையின் அடிப்படையில் - இதமான இசையை ரசிக்க விரும்பும் இசை ஆர்வலர்களுக்கு இந்தப்புதிய இசைக கருவி சிறந்த வரப்பிரசாதமாக உள்ளது.

தற்போது "ஒடிட்டோரியத்தில்" சிறந்த முறையில் கேட்புத்திறனை ஏற்படுத்துவதற்கு இயற்கைப் பொருளகளைப் பயன்படுத்துவதான ஆய்வு தொடர்கிறது. சணல், தேங்காய் நார், தேங்காய் சிரட்டை, பனை ஓலை ஆகியவற்றை ஒடிட்டோரியத்தின் சுவர்களைக்கட்டும் போது பயன்படுத்தி நல்ல முறையில் ஒலி அமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆய்வுகள் தொடர்கின்றன.

# இன்று சர்வதேச இளைஞர் தினமாகும்.

# இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் மக்கள் வங்கியின் YES சேமிப்பு கணக்கு இளைஞர்களான உங்களின் எதிர்காலத்தை இன்றே திட்டமிடும்.

yes
Young Executive Savings

நீங்கள் சுதந்திரமாக இருக்க விரும்புகின்றீர்களா?

## இன்றே YES சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

**YES கணக்கினால் உங்களுக்கு**

* இலவச நிலைவரக் கட்டளை
* கவர்ச்சிகரமான போனஸ் வட்டி
* இலவச ATM அட்டை
* வீடு/வாகன/திருமண வைபவ கடன் வசதிகள்
* உயர் கல்வி/வியாபார முன்னேற்ற கடன் வசதிகள்
* இலவச "கிரேடிட் காட்" அட்டை
* ஜய ஸ்ரீ சீட்டிழுப்பின் மூலம் ஜக்குவார்' மோட்டார் கார் மற்றும் பெறுமதி மிக்க பரிசில்கள் பலவற்றை வெல்லும் சந்தர்ப்பம்.

மேலதிக விபரங்கள் அருகிலுள்ள மக்கள் வங்கி கிளைகளில்

மக்கள் வங்கி

## கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற சகல பட்டதாரிகளையும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பதாக சகல ஆவணங்களுடனும் கிளிநொச்சி மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றிய அலுவலகத்திற்கு வருகைதருமாறு கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.பிரதீபன் கேட்டுள்ளார்.

(எ-301)

## கண்ணீர் அஞ்சலி

இடப்பெயர்வின்போது எமது வித்தியாலயம் இணைப்புப் பெற்றிருந்த யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலையில் அதிபராகவும், பின்னர் யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றிய

### முருகேசு சிறீஸ்கந்தராசா

அவர்கள் மறைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/உடுத்துறை மகா வித்தியாலயம், தாளையடி.

(C/36582)

## இல்லப் பாதுகாவலர்க்கான வெற்றிடம்

• எமது தென் இந்தியத் திருச்சபையினால் நடத்தப்படும் றொபேட்ஸ் ஆண்கள் இல்லத்திற்குத் தகுதி உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 18.08.2004 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, முகாமையாளர், றொபேட்ஸ் ஆண்கள் இல்லம், ஆதீன காரியாலயம், தென் இந்தியத் திருச்சபை, வட்டுக்கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


வயது: 25 - 50 வரை
கல்வித் தகைமை: க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்து இருதகல் வேண்டும். ஆங்கில அறிவு இருதல் வேண்டும்.
பட்டதாரி தகைமை கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெ.இ.திருச்சபை,
வட்டுக்கோட்டை.
- முகாமையாளர்.

(C-36576)(40-12-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 - 06 - 1932
உதிர்வு 13 - 07 - 2004



அமரர்

### அருள்திரு. அன்ரன் இராசநாயகம்

*உந்தன் சிறகுகள் ஒடிந்ததோ*
*உயிர்த்துடிப்புத்தான் ஓய்ந்ததோ! ஐயனே*
*உந்தன் இதயம் ஒருமுறை துடிக்காதா?*
*எந்தன் ஏங்கும் குரலை கொஞ்சம் கேட்காதா?*

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 12.08.2004 காலை 6.30 மணிக்கு இளவாலை கன்னியர்மட ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

விஜயன்குடும்பம், இளவாலை.

★ அன்னாரின் நினைவாக வெகுவிரைவில் ARV புரடக்சனின் கிறிஸ்தவ பஜனைப் பாடல்கள் ஒலிநாடா வெளிவரவுள்ளது.

A.R.V. புரடக்சன் உரிமையாளர்.
A.R. விஜயகுமார்,
போயிட்டி, இளவாலை.

(C/36580)(40-12-11)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலிங்கம் பாக்கியலட்சுமி



கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்னலிங்கம் பாக்கியலட்சுமி நேற்று (11.08.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை நாகம்மாவின் மகளும் சிவகுரு அன்னலிங்கம் (யாழ். பல்கலைக்கழக ஊழியர்) அவர்களின் மனைவியும் இளஞ்செழியன் (ப.நோ.கூ.சங்கம் யாழ்.), செல்வக்குமரன் (மாவீரர்), யசிந்தன் (யாழ். பல்கலைக்கழக ஊழியர்), பிங்களன் (ஐ.ரி.என்.வீடியோ சென்ரர்), அகிலன், மாயவன், கௌசிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரகிரி அவர்களின் மாமியாரும் சங்கீர்த்தனனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2004) வியாழன் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.44, 3ஆம் குறுக்குத் தெரு,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சி.அன்னலிங்கம்
(கணவர்).

(35182)(40-12-11)

## கிளிநொச்சியில் நேற்று வீதி ஒழுங்குக் கருத்தரங்கு

கிளிநொச்சி,ஓக.12

கிளிநொச்சியில் உள்ள காவல்துறையின் நடுவப் பணியகத்தில் நேற்று வீதி ஒழுங்குக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தைச் சேர்ந்த வாகனங்களின் சாரதிகளும், புனர்வாழ்வுக் கழகத்தின் வாகன சாரதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

நடுவப் பணியகக் கண்காணிப்பு பொறுப்பாளர் மாதவன், குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் இயலரசன், வாகனப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் கனகலிங்கம், வாகனப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுபபாளர் சிவகுமரான், பரிசோதகர் பவானி ஆகியோரும் இதில் பங்குபற்றினர்.

(எ)

## 2,053 தபாற்பொதிகள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஓக.12

வவுனியாவில் கடந்த பல மாதங்களாகத் தேங்கிக்கிடந்த குடாநாட்டுக்கான 2 ஆயிரத்து 53 தபாற்பொதிகள் நேற்று இலங்கைக் கடற்படைக் கப்பலில் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றை விநியோகிக்கும் பணி நாளை வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது என்று யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(10-201)

## சிறுவர் தினம் குறித்து நன்னடத்தைத் திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு அறிவிப்பு

தென்மராட்சி, ஓக.12

சர்வதேச சிறுவர் தினத்தை இவ்வருடம் சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தினர் சகல பிரதேச செயலகங்களுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள்ளனர்.

'பிள்ளைகளுக்கான சிநேகபூர்வ சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்' என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு சிறுவர்களது உரிமைகள், அவற்றைப் பாதுகாத்தல் என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் சமூகத்தினிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும செயற்றிடங்களை வகுத்துச் செயற்படுத்துமாறும் -

இத்திட்டத்தினை செயற்படுத்த 2 ஆயிரம் ரூபாவினைத் திணைக்களம் வழங்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்தந்தப் பகுதி பாடசாலை மாணவரிடையே போட்டிகளை நடத்த வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் மாகாண ஆணையாளர் என். ஆர். ரஞ்சினி அறிவித்துள்ளார்.

ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினமாக அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(எ-31-117)


தரம் 5

மாணவர்களுக்கான
விசேட இறுதிப் பரீட்சையும்
இலவசக் கருத்தரங்கும்

★ முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட வினாத்தாள்
காலம் 13.08.2004 வெள்ளி
பி.ப. 2 மணி (ப.நே.)
★ பதிவுகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.

(35183)

புதிய பாடல் MP3
மதுரா, அறிவுமணி, ஜெயசூரியா, பரவசம் உள்ளிட்ட புதிய பாடல்கள்.
தொடர்பு: ஸ்ரீவிநாயகர் வீடியோ, வழக்கம்பரை, சுழிபுரம்.
T.P:.0712511004.

(35173)(40)

ராஜா யாழ்ப்பாணம்



சிலதினங்கள் மட்டும்
சிம்பு. ரம்யாகிருஷ்ணன். மும்தாஜ் நடித்த
குத்து
புதியநேரம்: 10.30, 2.30, 6.30

(சி-36364)(32)

நாகம்ஸ் சுன்னாகம்



சரத்குமார், சாக்ஸி, வடிவேல நடித்த
மாணிக்கதுன்
காட்சிகள் 11.00,3.00,7.00(புநே.)

(C/36415)(12)

சங்கானை
சரத்குமார், விசாநே, செந்தில் நடித்த
நேதாஜி
தினமும் 11.00, 2.45, 6.00 புநே
வெள்ளி, சனி, ஞாயிறு.
Past Perfect (இரவு 8.45 பு.நே.)


## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி அமிர்தலிங்கம் (அமுது)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, ராஜ வீதியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி அமிர்தலிங்கம் நேற்று (11.08.2004) புதன்கிழமை சிவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், லாவண்ய சொரூபி (லாலா) அவர்களின் அன்புக் கணவரும், அமுதசொருபன் (விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்), அகிலன், அஜந்தன் (பிரான்ஸ்), அகன் (யா/இந்துக் கல்லூரி-உயர்தரம் 2003) காலஞ்சென்ற செல்வி அபிதா மற்றும் கார்த்திகன் (யா/இந்துக் கல்லூரி ஆண்டு - 7), கிருஷிகன் (புனித ஜோன் பொஸ்கோ) ஆகியோரின் அனபுத் தந்தையாரும் அருளாநந்தம், அமரர் கனகலிங்கம, பஞ்சலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நல்லைநாதன் (கனடா), திருநாவுக்கரசு, தர்மசொருபி, தர்மகுணலட்சுமி (ஜாப்தீவு), கலைஞான சொரூபி சிறீரங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ராஜ வீதி,*
*கோப்பாய்.*

தகவல்:
அ.லாவண்ய சொருபி
(மனைவி)

(35178)(40-12-11)

### திருமதி பொன்னுத்துரை லீலா

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை லீலா 10.08.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் தங்கமலர் (சுவிஸ்), ஸ்ரீறங்கநாயகி, சோதி (சுவிஸ்), பராசக்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீஸ்கந்தராசா (சுவிஸ்), தருமராசா (சுவிஸ்), விஜயலக்ஷ்மி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, வைத்திலிங்கம், உத்தமிப்பிள்ளை, அம்மா, கனகம்மா, திரவியம், ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் சார்ஜன் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மயூரா, ஜீவதாஸ், விமலதாஸ், அஜித்தா, சிந்துஜா, சாருஜன், றஜிதன், ரஜீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.08.2004) வியாழக்கிழமை பி.பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

தகவல்:
பொ.சோதி (சுவிஸ்)
மகன்.

(35180)(40-12-15)

### இராஜரட்ணம் திருஞானசோதி

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் திருஞானசோதி நேற்று (11.08.2004) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருதிருமதி சந்திரசேகரம் இராஜரட்ணம் (சட்டத்தரணி) தம்பதிகளின் அன்பு மகனும் யோகலட்சுமியின் (கனடா) அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*"சிவலோகம்"*
*உசன், மிருசுவில்.*

தகவல்:
கு.விமலதாஸ்
(மைத்துனர்).

(35181)(40-12-11)

### தம்பையா நவரெட்ணம்

(Retd. Offica Posted Saving Bank)



உரும்பிராயைச் சேர்ந்தவரும், மலேஷியாவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வாழ்விடமாகவும் கொண்ட தம்பையா நவரெட்ணம் 09.08.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பிரபல ஆயுர்வேத வைத்தியர் கந்தையா செல்லம்மா தம்பதியினரின் அருமை மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் ஜெயந்தன் (Canada), கிரிஜா (France), நிரஜா (Canada) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கௌரி, யசோகுமார், பிரபாகரன் ஆகியோரின் அருமை மாமனாரும் பிருந்தாவன், கிருத்திகா, ஜனுசன், சஜீவன், யஷிக்கா ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், பாலசுந்தரம் ஆகியோரின் அருமைத் தம்பியும் செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான குணரெத்தினம், வன்னியசிங்கம், அமிர்தரெத்தினம் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.08.2004 அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் செம்மணி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.29, முருகேசர் ஒழுங்கை,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(35173)(40-12-11)

### திருமதி ஜோசெப்பு அருளம்மா

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜோசெப்பு அருளம்மா அவர்கள் 10.08.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஜோசெப்பின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருமைநாதன், செல்வமணி மற்றும் தங்கமணி, மெசியோ, டேவிட், திரேசம்மா, தவம், ஜோஜ், சகாயமலர், செல்வரட்ணம், அல்பிறட், சின்னக்கிளி, பேபி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை வழிபாடுகள் இன்று (12.08.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு பி.ப. 3.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*70/3, பழைய பூங்கா வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
யோ.அல்பிறெட்
(மகன்).

(35173)(40-12-15)

# மீள ஆயுதங்கள் வழங்க கோருகின்றது ஈ.பி.டி.பி.?

மீளப்பெறப்பட்ட தமது ஆயுதங்களைத் திரும்பவும் வழங்குமாறு ஈ.பி.டி.பியினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்திய ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின பிரகாரம் ஈ.பி.டி.பி. உட்பட தமிழ் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டன.

ஆனாலும், உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் தமது அமைப்பின் உறுப்பினர்கள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்திருக்கும் டக்ளஸ் தேவானந்தா, தமது உறுப்பினர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதால் அவர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக மீண்டும் தமக்கு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டக்ளஸ் தேவானந்தாவின் இந்தக் கோரிக்கையைச் செவிமடுத்த ஜனாதிபதி, இது குறித்து எழுத்து மூல வேண்டுகோளொன்றைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார் எனவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. - இப்படி அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது. (க)

## மட்டு நகரில் ஆர்ப்பாட்டம்

காத்தான்குடி,ஓக.12

மட்டக்களப்பு பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நண்பகல் 12 மணிமுதல் 1 மணி வரை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்னால் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 150 பேர் பங்குகொண்டனர்.

ஊழியர்களின் சம்பள உயர்வு, இந்திய நிறுவனத்திற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைக் கையளிப்பதற்கு எதிர்ப்பு, அமைச்சரவையின் 2001ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கத் தீர்மானத்தின்படி சமயாசமய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களை முன்வைத்தே இவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். (க)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்ட அறைக்குள் சுமார் நாலரை மணி நேரம் நடைபெற்ற இந்தப் பேச்சுத் தொடர்பாக விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எவரும் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

சந்திப்புத் தொடர்பாகக் குயிலின்பன் தகவல் தருகையில் கூறியதாவது:-

அண்மைக்காலமாக பாதுகாப்புத் தரப்பினர் புலிகளின் உறுப்பினர்களுடன் நடந்துகொள்ளும் முறை விசனிக்கத்தக்கதாக உள்ளது. புலி முக்கியஸ்தர்கள் கூட சாதாரண மக்களைப் போன்று நடத்தப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்று நாம் இச்சந்திப்பில் வலியுறுத்தினோம். உடல் ரீதியாக சோதனைகள் தவிர்க்கப்படவேண்டும் என்றும், எமது உறுப்பினர்கள் தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளூடாகப் பேச்சு நடத்தலாம் என்று நாம் வலியுறுத்திக் கூறினோம் - என்றார் குயிலின்பன்.

கண்காணிப்புக் குழுவின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகளான றைமோறஸ்ரால், சுசன் நின்ங்காம அகியோரும் இப் பேச்சுக்களில் கலந்துகொண்டனர். (க-9)

## அரசுடன் இணைவது குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தரப்புடன் இணைவது என்று சில காலத்துக்கு முன்னர் தீர்மானித்தது. அரசுடன் சேர்ந்தால் என்னென்ன அமைச்சுக்களை ஏற்பது என்பதைக்கூட இ.தொ.கா. பேசி முடிவுசெய்திருந்தது.

அரசுப் பக்கம் தாவும் தீர்மானத்தின் முதல் கட்டமாக மத்திய மாகாணசபையில் தலைவர் பதவியையும் ஊவா, சப்ரகமுவா ஆகிய இரு மாகாண சபைகளிலும் உபதலைவர் பதவிகளையும் இ.தொ.காவினர் ஏற்றுக்கொண்டனர்.

அதேசமயம், இ.தொ.காவுக்கு இடமளிப்பதற்காக அரசில் சில அமைச்சுக்களையும் ஒதுக்க வேண்டிய நிலை அரசுத் தரப்புக்கு ஏற்பட்டது.

இதற்காக, சமூக அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி.ரட்ணாயக்காவை அவரது அமைச்சுக்களை இ.தொ.காவிற்கு விட்டுக் கொடுக்கும்படி அமைச்சர்களான அனுரா பண்டாரநாயக்க, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, மங்கள சமரவீர ஆகியோர் அழுத்தம் கொடுத்துவந்தனர்.

இந்த அமைச்சுப் பொறுப்புக்கள் 16ஆம் திகதி இ.தொ.காவின் எம்.பியான முத்து சிவலிங்கத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

தற்பொழுது பெருந்தோட்டத்துறை இளைஞர், யுவதிகளுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டாலும், எந்த நியமனமும் உடனடியாக வழங்கப்படக் கூடாது. நாம் அமைச்சைப் பொறுப்பேற்றபின்னரே எமது கைகளால் அவை வழங்கப்பட வேண்டும் - என இ.தொ.கா.தலைமைப் பீடம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை - அணி மாறுவதற்கான முன்னேற்றப்பாடாக - விடுத்தும் இருந்ததாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், சிறிதும் எதிர்பாராத நிலையில் ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை உதறிவிட்டார். கூட்டமைப்புக்குள்ளும் குத்துவெட்டு.

இதனால், மேலும் ஆட்டம் கண்டுகொண்டிருக்கும் அரசுக்கு முட்டுக் கொடுப்பது புத்திசாலித்தனமான செயலாகாது என இ.தொ.கா. ஆதரவாளர்கள் தலைமைக்கு எடுத்துக்கூறி உள்ளனர். இதனால் இ.தொ.கா.தலைமை இரண்டுங்கெட்டானான தர்மசங்கடமான நிலைக்குத் தளளப்பட்டுள்ளது.

மாகாணசபைகளில் அரசுத் தரப்பில் பதவிகளை ஏற்றுக்கொண்டவர்கள், விலகித் தொடர்ந்தும் எதிர்வரிசையில் அமர்வது என்பது உறுதியாகிவிட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

மாகாணசபைகளில் ஆளும் பக்கம் சேருவது என்ற முடிவு கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நாட்டில் இல்லாத நிலையில் எடுக்கப்பட்ட தடுமாற்றத் தீர்மானம். எனவே, அந்தப் பதவிகளை உதறிவிடலாம் - என்ற சமாளிப்புக் காரணம், அப்பதவிகளை ஏற்றவர்களுக்கு கட்சி நிர்வாகத்தினால் 'உரிமையோடு' கூறப்படுவதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது. (க)

## இடைக்கால நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு பேச்சு மூலமும் இடைக்கால நிர்வாக அதிகாரங்களைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட முடியாது. அப்படியொரு இடைக்கால நிர்வாகசபை உருவாக்கப்பட வேண்டுமானால் அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடனேயே அங்கீகரிக்கப்படவேண்டும்.

அதேவேளை, மீண்டும் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படும்போது ஜாதிக ஹெல உறுமய உட்பட சகல அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளும் அதில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும் - எனக் குறிப்பிட்டுள்ள ஈ.பி.டி.பி. தன்னிச்சையாகப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அது வடக்கு - கிழக்கு மாகாணத்தை ஐக்கிய இலங்கையிலிருந்து பிரிப்பதற்குச் சமம் எனவும - எச்சரிக்கை விடுத்துள்ளது. (க)


**ஜெயபாரதி** இந்து மகளிர் ஒழுங்கை. கந்தர்மடம், யாழ்.
A/L DAY CLASS
துரித மீட்டலும் வினாவிடை வகுப்புகளும்
I.O: சயந்தன் | H.C.: ஜெயக்குமார்
TA.: சிவா | Geo.: N.S.சங்கர்
ஆரம்பம்: 2004. 8. 14 சனி 4மணி (பி.நே.)
(C/35080) -நிர்வாகி.

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS. (33927)

**NEW SCIENCE COLLEGE**
இணைந்த கணிதம்
A/L 04 Repeat
புதிய பிரிவு நடைபெறுகிறது
Mon.,Tue.,Wed.,Thu., Fri.,
7.00-8.00(a.m.) (ப.நேரம்)
P.செந்தில்நாதன் B.Sc. (35179)

**ஈசன் கல்வி நிலையம்**
A/L 2005 DAY CLASS
வர்த்தகப் பிரிவு
Acc:- D.SAM. Mon. Wed. Fri: 7.00a.m.
B.St:- B. பசில் Mon. Tue. Wed. Thu. Fri: 8.30a.m.
Eco:- K. உதயன் Tue. Thu. 7.00a.m.
ஆரம்பம்: 19.08.2004
THU. - 7.00 a.m. (35038)

**BITSMANS**
கல்விநிறுவனம், மானிப்பாய்.
A/L 2006
அசேதன இரசாயனம்
INORGANIC
ஒட்சியேற்றம் தாழ்த்தல் (C/36569)
ஆசிரியர் திரு.N.மகேஸ்வரன் (B.Sc. Hons)
ஆரம்பம்: 14. 08. 2004 சனி 4. 30 P.M

**SUBRA**
Spoken English and Grammar
by
BRITTO
புதிய பிரிவு 13.08.2004 மாலை 4.30 மணிக்கு
★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை ★
பேச்சுச் சிங்களம்
திரு.லீலாக்கிருஸ்ணன்
மாலை 6.30 மணிக்கு (C/36485)

**BIT**
Bachelor of Information Technology
University Of Colombo School Of Computing
கொழும்புப் பல்கலைக்கழகத்தில்
மேற்படி தகவல்
தொழில்நுட்பமானி
பட்டக்கல்விக்கான,
கல்வியாண்டு 2004/2005
இற்குரிய தெரிவுப்பரீட்சைக்கான
(மீள் பரீட்சை) விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி : 16.08.2004
IIS தலைமையகத்தில் பதிவுகள்
ஏற்றுக்கொள்ளப்படும்.
மீள் பரீட்சை
"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி" (C/36579)
INSTITUTE OF INFORMATICS STUDIES
# 100, Clock Tower Road,
Jaffna. T.P. No: 021 222 2831

**CHEMISTRY CENTRE**
Temple Road.
DAY CLASS
Bio : அல்போன்ஸ்
Maths : பிரபாகரன் / : ஜெயந்தன்
Che. : அன்பழகன் / : ஜெயந்தன்
Phy. : செந்தில்குமரன் / : பிரபா
வழமையான ரியூசன் முறைகளிலிருந்து வேறுபட்ட, புதிய கற்பித்தல் உத்திகளை உள்ளடக்கியது. (C/36534)
ஆரம்பம்: 13.08.2004 Fri. 5.00 p.m.

**ஞானோதயா அக்கடமி**
சாவகச்சேரி.
DAY CLASS
Phy. { பிரபா / தயாளன்
Che. அன்பழகன்
Bio. நாகநாதன்
Maths ஜெயந்தன்
ஆரம்பம்: 13-08-04 10a.m. (C/36561)

**BRIGHTMAN** (கிளை நிறுவனம்)
நாவலர் வீதி, யாழ். நகர்.
பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
பௌதிகம்
பிரிவு I 7.00-8.30 a.m. மாதிரி வினாத்தாள்களும் கடந்த கால வினாத்தாள்களும் முழுமையான மீட்டல்.
பிரிவு II 1.30-3.00p.m. அலகுரீதியான மீட்டல்
By: ஜெயசீலன் SAT. 7.00 a.m.
ஆரம்பம்: 14.08.2004 (35119)

**நாவலர்**
ஆனைப்பந்தி - யாழ். நகர்
A/L DAY CLASS
Tam. - நாக தமிழிந்திரன்
H.C. - முகுந்தன்
Log. - S.R.J. சுதன்
Geo. - இக்னேசியஸ்
Acc. - மோதிலால்
Eco. - நவதாசன்
B.St. - முரளி
ஆரம்பம்: 13.08.2004
வெள்ளி 10.00 a.m. (35107)

**பெற்றோர்களே!**
உங்கள் பிள்ளைகளின் A/L பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்கவில்லையா?
உங்கள் பிள்ளையின் பல்கலைக்கழக அனுமதி?
உங்கள் பிள்ளையின் வேலைவாய்ப்பு?
மொத்தத்தில் உங்கள் பிள்ளையின் எதிர்காலம்?
விடை: IIS ஆல் மட்டுமே முடியும்.
ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டிய IIS நிறுவனம் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கும் வழிகாட்டக் காத்திருக்கின்றது.
உங்கள் பிள்ளை கணனித்துறையில் ஒரு துறைசார் வல்லுநராக சர்வதேச பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக, கௌரவமான ஒரு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள அல்லது வெளிநாடு சென்று உயர் கல்வியைத் தொடர்வதற்கு நாம் வழிகாட்டுகின்றோம்.
கவலையை விடுங்கள். மேற்படி விடயம் தொடர்பாகப் பெற்றோர்கள மாணவர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்று 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு IIS இன் தலைமை அலுவலகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமான இக்கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள்.
'IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி'
INSTITUTE OF INFORMATICS STUDIES
' An *Edexcel* approved training Centre'
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. No: 021 222 2831/ 021 222 6933

**அச்சியந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள் தேவை**
கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்ற அனுபவம் வாய்ந்த அச்சியந்திர இயக்குநர்களும் பயிலுநர்களும் உடன்தேவை.
கொழும்பில் பணியாற்றுவோருக்கு தங்குமிட வசதி வழங்கப்படும். நேரில் சமுகமளிக்கவும்
உதயன் பணிமனை
360, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/36575)

**CIMA**
CIMA நிறுவனத்தில் இருந்து உயர் அதிகாரிகள் குழுவினர் மாணவர்களைச் சந்திப்பதற்காக வருகை தருகின்றனர். எமது நிறுவன மாணவர்கள், CIMA கற்க விரும்பும் மாணவர்கள் மற்றும் ஆர்வம் உடையோர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
காலம் : இன்று (12.08.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணி
Director
Jaffna College Undergraduate Dept.
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (36547)

**D.C.M**
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS

| ஆசிரியர் | பாடம் | நேரம் (மு.ப.) |
|---|---|---|
| உமாகாந்த் | வணிகக் கல்வி | 7.00-8.00 |
| முகுந்தன் | கணக்கீடு | 8.00-9.30 |
| வரதராஜன் | பொருளியல் | 9.30-11.00 |

ஆரம்பம்:- 16.08.2004 திங்கள் 8.00 மணி (மு.நே.)
இயக்குநர் S.வரதராஜன். (35056)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.